KINNIYA PROGRESSIVE YOUTH LEAGUE

# அண்ணல் கவிதைகள்



அரசு வெளியீடு

சுந்தரம்பிள்ளை.

கவிஞர் [illegible]. செ. சுந்தரம்பிள்ளை
677/[illegible], [illegible] வீதி
யாழ்ப்பாணம்

கவிஞர் செ. சுந்தரம்பிள்ளை
அல்வாய் வடக்கு
அல்வாய் (இலங்கை)

# அண்ணல் கவிதைகள்

## கவிஞர் அண்ணல்

கவிஞர் செ. சுந்தரம்பிள்ளை
அல்வாய் வடக்கு
அல்வாய் (இலங்கை)

அரசு வெளியீடு,
231, ஆதிருப்பள்ளித் தெரு,
கொழும்பு - 13, (இலங்கை).

அரசு வெளியீடு : 7.

முதற் பதிப்பு : ஒக்டோபர், 1964.

விலை ரூபாய் : **2-25**

# Annal Kavithykal

(A Collection of Poems)

Author : POET ANNAL

Publisher : ARASU PUBLICATIONS,
231, Wolfendhal Street,
Colombo - 13, (Ceylon).

First Edition : 3rd October, 1964.

Price : Rs. 2. 25.

Published under the Auspicious of
The Kinniya Progressive Youth League.

ரெயின்போ பிரிண்டர்ஸ், கொழும்பு - 13.

# சமர்ப்பணம்

பெற்றார்க் கென்றாற் பெருந்தலை
யிடியே யானாலும்
முற்றாய் என்னில் அன்பெனும்
மாரி முழுக்காட்டிப்
பற்றாய் என்றன் பாதையில்
விட்டுப் பயன்காண
நற்றுணை செய்த ஈன்றார்க்
கிந்நூல் சமர்ப்பணமே.

# பதிப்புரை

தமிழ்மொழியில் முதலெழுந்த இலக்கியங்கள் தனிப்பாடல் முறையில் அமைந்தன. அவை அகம் - புறம் என்னும் பொருள்களை நேர்த்தியாகச் சித்திரித்தன. தொகை நூல்களிலே காணப்படும் இத்தனிப்பாடல்கள் இன்றும் பயிலப்பட்டு வருகின்றன. இளமை குன்றாத நித்திய கன்னி வாழ்க்கை அவற்றிற்குண்டு.

தனிப்பாடல்கள் சுவைத்து இன்புறத் தக்கன. அச்சுவை இன்றும் நம்மால் வளர்க்கப்பட்டே வருகின்றது. ஒரு பொருளை ஒரு செய்யுளில் வைத்துப் பாடுவது சங்ககால மரபாகும். பின்னர் ஒரு பொருளைப் பல செய்யுள்களிலே இயற்றும் மரபு வளர்வதாயிற்று. இக்காலத்தில் வழங்கப்பெறும் தனிப் பாடல்கள் பல செய்யுள்களைக் கொண்டதாகவே அமைந்துள்ளன.

இவ்வகையி லெழுந்த தனிப்பாடற்றொகுதியொன்றை வெளியிடுவதில் 'அரசு வெளியீடு' பெருமை யடைகின்றது.

கவிஞர் 'அண்ண'லுடைய பாடல்களே இதன்கண் தொகுக்கப் பெற்றுள்ளன.

கவிஞர் அண்ணல் நாடறிந்த எழுத்தாளராவர். தமிழிலக்கியத்தின் பல துறைகளிலே இவர் உழைத்துவரினும், கவிஞராகவே இவர் பெயர் நிலேத்துள்ளது. பலதிறப்பட்ட பொருள்களே இவர் தம்முடைய பாடல்களிலே கையாண்டுள்ளார். இவர்தம் கவி வண்ணத்தை இத்தொகுதியிற் காணலாம்.

*

'அரசு வெளியீடு', தமிழிலக்கியத்தின் ஒவ்வொரு துறையிலுஞ் சிறந்த நூல்களே வெளியிட்டு வருதலேயே தனது பணியாகக் கொண்டுள்ளது.

'அரசு வெளியீ'ட்டின் முதலாவது தனிப்பாடற் றெகுதியாக வெளிவரும், 'அண்ணல் கவிதைகள்' என்னும் இச்செய்யுள் நூலே, நமது நூல்களேப் பெரிதும் ஆதரிக்கும் வாசகப் பெருமக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்களென்பது நமது நம்பிக்கையாகும்.

வணக்கம்.

**எம். ஏ. ரஹ்மான்**
**அரசு வெளியீடு.**

# அணிந்துரை

இக்ண்ணியா முற்போக்கு வாலிபர் மன்றம் இஸ்லாமிய மாணவர்களையும், இளைஞர்களையும், வாலிபர்களையும் சமய - சமூக - கலை - கலாசார- இலக்கியப் பணிகளில் ஈடுபடுத்தி உழைத்து வருகின்றது.

சமய, சமூக, கலை, கலாசாரத் துறைகளில் புத்துணர்வையும், மறுமலர்ச்சியையும் தோற்றுவிப்பதற்காக முதலாவது இஸ்லாமியப் பெருவிழாவை நடாத்த முன்வந்தோம், இலக்கியத் துறைக்கு உழைக்குமுகமாக இப்பெருவிழாவிலே, ஈழத்து முஸ்லிம் எழுத்தாளருடைய தமிழ் இலக்கிய ஆக்கமொன்றை நூலுருவிற் கொணர நினைத்தோம்.

எவருடைய நூலை வெளியிடுவதென்ற கேள்வி எழுந்தபோழுது, கவிஞர் அண்ணலின் உருவமே நம்முன் தோன்றியது.

கவிஞர் அண்ணலென ஈழத்து இலக்கிய உலகில் அழைக்கப்படும் ஜனாப் எம். எஸ். எம். சாலிஹ் அவர்கள் சிறந்த முஸ்லிம் கவிஞர் மட்டுமல்லாமல், தமிழ்க் கவிஞர் வரிசையிலும் இன்று முன்னணியில் நிற்பவராவர். ஒரு மாமாங்க

காலமாக, 'நமக்குத் தொழில் கவிதை' என இலக்கியப் பணி புரிபவர்.

கவிஞர் அண்ணலுடைய முதலாவது கவிதைத் தொகுதியை நமது ஆதரவில், 'அரசு வெளியீடு' நிறுவனம் பதிப்பிக்க முன்வந்ததில் நாம் பேருவகையடைகின்றோம். கடந்த சில ஆண்டுகளாக அவர்கள் தமிழிலக்கியத் துறையில் ஆற்றிவரும் அரும் பணியை தமிழ்கூறும் நல்லுலகம் நன்கறியும். இன்று தமிழ் இலக்கிய நூற்பதிப்புத் துறையில் அவர்கள் முன்னணியில் நிற்கிறார்கள். அவர்களுக்கு நமது நன்றி.

கிண்ணியா முற்போக்கு வாலிபர் மன்றம், இன்னும் பல நூல்கள் தோன்றுவதற்கு உழைத்து வருமென்பது நமது நம்பிக்கையாகும்.

ஏ எல். ஏ. மஜீது, பி, ஏ.
தலைவர்.

கிண்ணியா முற்போக்கு வாலிபர் மன்றம்,
கிண்ணியா,
30 - 9 - 64.

# முன்னீடு

அண்ணல் தமிழுக் கணி செய்ய வந்தவரே, திண்ணம். அவர் பாத் திரட்டு வெளிவருதல் ஈழத்தவராம் எமக்கு மிகத் தேவை.

வாழத் தகுந்த கவிதை வரி எழுதி வைத்துவிட்டால் மட்டும் வளரோம். அவற்றை ஒரு புத்தகமாய்ப் போட்டுப் பொது மக்கள் கைகளிலே தந்து விடுதல் தகுந்த பணி ஆகும்.

வந்து விழுந்ததன் மேல் வண்டுகள் போல் வாசகர் கள் உண்டு களித்தல் உயர்வுக் குகந்த வழி; கண்டு தெளிதல் கருத்துக் கினிப் பாகும்.

வாள் எடுத்து வீச வலுவற்ருேர் செந்தமிழின் நீள நிலத்தில் நீகண் டெடுத்துச் செய்யுள்களே ஆக்கிக் களேத்த அவலம் அகல, இதோ தூக்கிப் பிடித்துத் துருக் களேந்து நெட்டுருக்கு யாப்பு வகைகளினே யாங்கள் கை ஆளுகிருேம், நாப்படைத்தார் யாரும் நயக்கும் படியாக.

வெண்பாவில் நாம் விளைத்த வீச்சால், வெறுஞ் சோற்றை உண்பார்கள்கூட உயர் கவிதை நாடுகிறார், பாநான்கும் இன்றெம் படையில் கருவிகளே. ஆனதனால் மீண்டும் அழகு பிறந்துளது.

அண்ணல் எம் கூட்டத் தவரே; அருங் கவிதை பண்ணல் தொழிலாகப் பல்லாண்டுழைத் துள்ளார். நண்பர் எவர்க்கும்; நகைத்த முகம் காட்டும் பண்பிற் குரியர்; பழகத் தெவிட் டாதார். காதலைக் கண்டால், கனிவார்; கசடுகளை மோதி உடைக்க னெனில் முன்னிற்பார் போரணியில்.

ஆதி முதல் இன்றளவும் வளர்ந்தாலும், தேதி இலாத சிறந்த படைப் பின்றும் வேண்டும் தமிழுக் கெனும் அவ்விருப்பத்தால், ஈண்டு புதிய எழுதி அளிக்கின்றார்.

மக்கள் அவரை மனனஞ் செய்தின் புறுதல் தக்கதே: வெல்க தமிழ்.

''மஹாகவி''

'நீழல்',
அளவெட்டி,
*1964 - 8 - 31.*

# அஞ்சலி

செம்மை சார்ந்த சொற்களிலே, உந்நத உணர்ச்சிகளின், வண்ண வார்ப்பே கவிதை. கவிதையே இலக்கியத்தின் இலங்கு சுடர். இச் சுடரின் ஒளிக் கீற்றின் வீச்சு எட்டாத கிண்ணியாவிலே... ஒருவன். அவன் உள்ளத்திலே, சடைத்துப் படரும் உணர்ச்சிகள். உணர்ச்சிகளுக்குச் சொல்லுருவங் கொடுக்குந் தாகம். இலக்கியத் தாகம். தாகத்தைத் தணிக்கும் வேட்கையுடன் 1945 ஆம் ஆண்டில், பதினைந்து வயது மாணவனாக, பசுந்தரைச் சுனையூற்றைத் தேடும் பயணத்தை அவன் மேற்கொள்ளுகின்றான். ஐந்து ஆண்டுகளின் பின், புரட்சிக்கமாலின் நட்புக் கிடைக்கின்றது. பயணத்தின் வழித்துணை ... உற்சாகந் தருகின்றது. பயணச் சிரமங் குறைகின்றது. கவிதை மடல்கள் நட்புச் செய்தி சுமக்கின்றன. உணர்ச்சிகளை வெளியிடக் கவிதை உருவத்தில் மோகந் தளிர்க்கின்றது.

எம். எஸ். எம். சாலிஹ் என்றழைக்கப்படுமவன் அண்ணலாகின்றான். காலவோட்டத்தில், அலஹாராம் மூதூரிலிருந்து கொண்டு இலக்கியப் பயணம் மேற் கொண்டிருந்த வ. அ இராசரத்தினத்தின் நட்புங் கிட்டுகின்றது. இலக்கியப் பயணத்தின் வழி தெளிர்தல். ஈராறு ஆண்டுகள்

மலர்ந்த கவிதை நறும்பூக்களுட் சிலவற்றை மாலையாகத் தொடுத்து ஈழத் தமிழ்த் தாய்க்குச் சூட்டுகின்றான். இஃது அவனுடைய முதலாவது கவிதைக் கோவையாம்.

அவனுக்கு ஈழத்துக் கவிஞர்களிடையே 'மஹாகவி'யினுடைய கவிதைகளில் மிக்க ஈடுபாடு. அந்த மஹாகவியின் முன்னுரை இந் நூலுக்குக் கிடைத்தமைக்கு அவன் மிக்க நன்றியுடையான். இச்சந்தர்ப்பத்தில், பத்திரிகைக் களமமைத்துக் கொடுத்து, ஈழத்து வாசகருக்கு அவனுடைய கவிதைகளை அறிமுகப் படுத்திய திரு எஸ். டி. சிவநாயக மவர்களுக்கும் மனம் நிறைந்த நன்றியைக் கூறுகிறான். அவன் பிறந்த மண்ணின் முன்னேற்றத்திற்குச் சலியாது உழைத்து வருபவர் ஜனாப் ஏ. எல். ஏ. மஜீது, பீ. ஏ., எம். பி. ஆவர். அவர் தம் தலைமையிற் கிண்ணியா-முற்போக்கு மன்றம் உருவாயிற்று. மன்றத்தினரின் சலியா உழைப்பு முதலாவது அகில இலங்கை இஸ்லாமியக் கலை விழா. அக்கலை விழாவில் இத்தொகுதியை வெளியிட உழைத்த மன்றத்தினருக்கு அவன் மிக நிறைவான நன்றிகளைச் செலுத்துகின்றான். இம் மன்றத்தினரின் எண்ணத்தை உவந்தேற்று, இதனை அச்சிட்டு வெளியிட்டுள்ள அரசு வெளியீடு அதிபர் ஜனாப் எம். ஏ. ரஹ்மான் அவர்களின் உழைப்பிற்கு அவன் நிறை நன்றி கூறுகின்றான்.

சர்வ வல்லமைக்கும் புகழுக்கும் உரியனை எல்லாம் வல்ல ஏகனுக்கு என்றும் அவன் அஞ்சலி.

'அண்ணல்'

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | இறை வணக்கம் | 13 |
| 2. | விளைவு | 14 |
| 3. | தவிப்பு | 17 |
| 4. | அவள் | 19 |
| 5. | அவருக்கென்ன? | 21 |
| 6. | இனிமைக் கனவு | 24 |
| 7. | ஆரோ நிகர்? | 27 |
| 8. | ஏக்கம் | 29 |
| 9. | பித்தன் | 33 |
| 10. | நிகழ்த்திடுமோ? | 35 |
| 11. | எழும்பு | 37 |
| 12. | வடு! | 40 |
| 13. | தளர்வு | 42 |
| 14. | பிணை | 45 |
| 15. | ஆடினார்! | 47 |
| 16. | சோடிகளாவோம்! | 50 |
| 17. | துயர் | 52 |
| 18. | என்னிடஞ் சொல்வாயே | 54 |
| 19. | உறுதி | 56 |
| 20. | துணிவு | 58 |
| 21. | துணை | 60 |

| | | |
|---|---|---|
| 22. | நெஞ்சே மற! | 63 |
| 23. | பசி | 65 |
| 24. | தாவு ! | 67 |
| 25. | பெண்மை | 70 |
| 26. | மனையறம் | 72 |
| 27. | பிரிவு | 75 |
| 28. | கலை மடந்தை | 77 |
| 29. | பேறு | 79 |
| 30. | வரம் | 81 |
| 31. | முடிவு? | 83 |
| 32 | தக்பீர் முழக்கம் | 86 |
| 33. | நோன்பில் .. | 89 |
| 34. | துதிப்பாய்! | 91 |
| 35. | அருள்புரி! | 93 |
| 36. | அணை | 95 |
| 37. | அவசரம் | 97 |
| 38. | நீ யார்? | 99 |
| 39 | நிகருண்டோ? | 102 |
| 40. | உயர்வுக்கு... | 106 |
| 41. | அறம் | 108 |
| 42. | வினா? | 111 |
| 43. | சிரிக்கின்றேன்! | 114 |

# இறை வணக்கம்

உயிர்களுக் குயிராய்ப் பாயும்
　　ஒளிகளுக் கொளியாய்த் தோன்றும்
பயிர்களின் விதையாய் அங்கு
　　பாய்ந்திடு நதியின் ஊற்றின்
உயிரதன் உயர்வாய் எண்ணில்
　　உலகுக் கச்சாணி யாகி
துயர்களே இறைவா! உன்னுல்
　　தொடங்கு மென் கவிதை மாலே.

*

K - 2

# விளைவு

நெஞ்சி லழுத்தம் நெடுமூச்
சிடைமயக்கம்
கஞ்ச மலர்முகையி லுங்கடுப்பு;
—பஞ்சணையில்
வெஞ்சமரில் வந்த விளைவோ!
கருநெடுங்கண்
அஞ்சனமே இல்லை அறி.

தூர்ந்த குளத்தின் தொடர்பாசி
அன்னநுதல்
நேர்ந்த பசப்பை நினைக்கின்றேன்
—சேர்ந்தவரின்
செங்கனிவா யிட்ட சிதையல்
அமிழ்தாமோ
எங்கிருந்து வந்த திது?

மேற்கில் கனிந்து மெருகோடுஞ்
செவ்வானைப்
போற்கிடக்கு மென்மார்பில் பூக்கின்ற
—தோற்றத்தில்
நீலக் கலப்பை நிறைத்து
நரம்போடும்
கோலமல ராக்கியது யார்?

தூக்கம் விழிப்புக் கிடையே
இனிமைதரு
வீக்கம் விருப்பில் வெறுப்போடு
—பூக்கும்
புதுமலரின் பூரிப்பா? பூந்தாது
சேர்த்த
இந்தாளு விந்த நிலை?

பாலை மறந்தேன்; பசியின்றி
நித்திரைக்கும்
வேலை கொடுக்க விலையன்றே
—ஓலையிலே
காத லருந்துங் கனவுநிலை
கைகூடும்
போதோ விளைந்த திது?

உண்டி அறுசுவையி லுண்டு
பசியுமுண்
டுண்டி குடலில் ஒதுங்காதாம்
—கண்டபடி
வாந்தி யெடுக்கும் வழியுமுள்ள
தெங்கிருந்து
சேர்ந்ததோ விந்தச் சனி!

எல்லாச் சுவையும் இருந்தும்
புளிச்சுவையை
உள்ளம் விரும்பும் உவப்புக்கு
—நல்லாரும்
எங்கெங் கிருந்தோ எடுத்து
வருகின்ருர்
செங்கனிகள் யாவும் தெரிந்து.

வாய்க்குருசி தேடி வ்கையாய்ப்
படைக்குமெனே
நோய்க்கரசி யாக்கி, நுவலாது
—வாய்க்குளெதோ
வைத்துக் கனிகின்ருர் வண்மைத்
திறமவரில்
பொய்த்ததிலே என்ருல் புளுகு.

*

# தவிப்பு

---

வேதனைக்கு வித்திட்டார்!
வளர்த்தாரே நாளை!
விடிவெள்ளி தோன்றுதா?
கூவாதா சேவல்?
சோதனையோ, இராநீட்சி?
துஞ்சாதாம் கண்ணும்.
சொந்தத்தை, அன்புறவை
மறவாதாம் நெஞ்சும்.
நாதனுரு தீட்டும்உளம்.
நல்லாரின் காதல்
நயமான பேச்சுவரும்.
கூற்றுவரும். கொடியோன்
சாதனையுங் கண்டிடுவேன்.
மலர்ப்படுக்கை முள்ளே!
சந்திரனின் ஒளிக்கதிரும்
தீக்கதிரா என்ன?

வேகட்டும் என்றேதான்
வெந்துயரில் என்னை
விட்டெங்கு சென்றாரோ?
பிறைநுதலுஞ் சாம்பல்
ஆகட்டும்! எனக்கென்ன?
அவர் உண்ணும் இந்த
அழகான செவ்விதழும்
ஒளிஇழந்து, நிறமும்
போகட்டும்! மைக்கடலின்
அலைவீசுங் குழலும்
புகையாக, முகிலாகப்
பறக்கட்டும்! வளையும்
ஏகட்டும்! அவர்தோளைத்
தடவாத கரத்திற்
கெழில் என்ன வேண்டும்? எனக்
கவர்வேண்டுந்தோழி!

*

# அவள்

கண்ணைக் காட்டிக் கருத்தைக் காட்டிக்
காதல் செய்தேனு?
கண்ணைக் கடையில் உருட்டி வைத்தேன்,
கழுத்தைச் சாய்க்கிரு?

வெண்ணெய் திருடும் கண்ணன் போல
வேலிசென்றேனு?
திண்ணை யோரம் நின்றுகொண்டேன்,
சிரித்துக் காட்டுரு?

உச்சிவானம் பிளந்த மின்னல்
உதட்டிற் காட்டுரு.
மச்சானென்று துள்ளும் மனதை
மறைத்துப் பூட்டுரு.

கரியநாகம் போலப் பின்னல்
கண்ணை யுறுத்திட
விரியும் விழியை உயிரை உண்ண
விரட்டிவிடுகிறு.

செக்கர் வானச் சிவப்பை உடம்பிற்
சேர்த்து வைத்தவ
பக்கம் நெருங்கிப் போனுமட்டும்
பயந்தேன் சாகிறு?

ஓடிக்கொண்டு கதவை மூடி
ஒளிந்து நிக்கிறு.
வாடி மச்சாள்', என்று தொட்டால்
வம்பு நேருமோ?

நித்தநித்தம் நினைத்தும் ஒன்றும்
நெஞ்சில் தெரியலை.
பித்தனுக்கி விட்டாள் கன்னி,
பேச ஒண்ணுமோ!

# அவருக்கென்ன ?

கண்மணியே, கற்பகமே,
காதல்வானிற்
கண்சிமிட்டுந் தாரகையே,
கன்னற்சாறே,
பண்ணமைந்த செந்தமிழ்ச்சொற்
பாவாய், என்றன்
பால்வெள்ளை உள்ளத்தில்
ஒளிந்திருந்தே
எண்ணத்தில் சிரிக்கின்றாய்
நடன மாடி
ஏற்றத்தைப் பெறுகின்றாய்
என்று கூறி
மண்ணாக்கி என்வாழ்வை,
சமுதா யத்தில்
மதிப்பாக வாழ்ந்திடுவார்
—அவருக்கென்ன?

வானத்தில் வாழ்கின்ற
நிலவுப் பேதை
வையத்து மக்களிலே
இன்பப் போதை
தானேற்ற முயன்றிடினும்
தையல் உன்றன்
தண்மையிலே ஒளிகூட்டித்
தேனுஞ் சேர்ந்தே
கூனிவருங் கிழவருக்கும்
இளமையூட்டிக்
கொள்ளையிடும் வதனத்திற்
கீடோ என்று
மானத்தைப் பறித்தென்னை
மாற்றார் தூற்ற
மலையாக வாழ்ந்திடுவார்
—அவருக்கென்ன ?

மெல்லியலே பொன்னுடலில்
மின்சாரத்தை
மெழுகியதோ முலாம்பூசிக்
கட்டித் தங்கக்
கல்லினிலே கைதேர்ந்த
சிற்பி யுன்னை
கடைந்தானோ? புனைந்தவனக்
கண்ணில் வேலைக்

கொல்லுதற்கு வைத்தானோ?
கடலில் முத்தைக்
கருத்தாகப் பதித்தானோ,
பல்லாய்? என்றே
சொல்லாலே எனைமயக்கிச்
சோரம் போக்கிச்
சொகுசாக வாழ்ந்திடுவார்
— அவருக்கென்ன?

கொத்துப்பூச் சிரிப்பருந்தி
வெறியனானேன்
கொஞ்சுமெழிற் கிளிமொழியில்
பித்தனானேன்.
சத்தான பொருளில்லை
வைய மீதில்.
தனிச் செல்வம் உனையன்றிப்
பிறிதுகாணேன்.
செத்திடினும் உனக்காகச்
சாவதென்றே
தீர்மானஞ் செய்து விட்டேன்
என்று கூறிச்
சத்தியமுஞ் செய்திடுவார்!
ஆனாற்றோழீ,
சதிசெய்தும் வாழ்ந்திடுவார்
— அவருக்கென்ன?

*

# இனிமைக் கனவு

மான்நோக்கில் சொந்த மயல்நோக்கில்
அக்கண்கள்
நான்நோக்காக் கால்நோக்க என்கண்கள்
—ஏன்நோக்க
என்றெழுந்தே ஓடி இறங்கி
நகம்பார்த்து
நின்றதடி! மானே நினை.

பாட்டும் உரையும் பழைமை
அதிற்புதுமை
கூட்டும் உரையில் உளங்கூடி
—நோட்டத்தால்
என்னை அளந்தே இனிக்கச்
சுவையினையுண்
டுன்னிதழில் ஓடும் நகை.

கொவ்வைப் பழவிதழில் கூடும்
நகைஎழிலைக்
கவ்வும் இதழிரண்டு கைநீட்ட
—ஒவ்வாது
பொன்னின் சிலைக்கிளியாள் பூவுள்ளம்
வாடிடுமோ
தன்னுள் அடங்கித் தவி.

உத்தரவு போட்டேன் உதடும்
அடங்கிற்று
பத்தரையாம் மாற்றுப் பசும்பொன்னின்
—முத்துநகை
தன்னுள் எழுந்து தடுமாறிக்
கைகளுக்குள்
மின்னி மறைந்த விதம்.

நாற்குணத்தில் நாணம் நளினமிடப்
பூங்கோதை
நூற்குள் மணிநுழைந்த நுண்மையதாய்
—வேற்கண்
உரையாட வெட்கம் உறவாடக்
கன்னி
தரையோடு நின்றாள் தனித்து.

கதவோடு வந்தும் கனிவோடும்
என்கண்
மதகோடு நின்று மயலாய்
—இதழோடே
எச்சில் அமிழ்த்திநான் என்கால்
பெயர்த்துடனே
'விச்' சென்று பாய்ந்தேன் வெளி.

ஒற்றைக் கணத்தில் ஒருகோடி
எண்ணங்கள்
பற்றிப் படரப் பயங்கொண்டு
—நற்றேனும்
நானும் பிரிந்த நயமாம்
கதையிரவிற்
காணும் இனிமைக் கனவு.

*

## ஆரோ நிகர் ?

துள்ளுங் கயல் கொள்ளும் விழி
செல்லும் — அகம் வெல்லும்
வெல்லக் கிளிப் பேச்சால் உளம்
வீழ்ந்தாய் பொருள் ஆய்ந்தாய்
துள்ளும் நடை துடிக்கும் இடை
தோகை வடி வானுய்
கள்ளின் வெறி கண்டேன் உயர்
காதல் நெறி கொண்டேன்.

மூக்கின் நுனி வானே கிடும்
மூர்ச்சை நிலே யாவாய்
நாக்கேன் விளே தூக்க . . . விலே
நமக்கேன் அது கவலே
நோக்கோ உளம் பார்க்குஞ் சுவை
நூறு கதை கூறும்
சாக்கே னினிக் காதல் வசம்
சார்ந்தோம் நெறி ஆய்ந்தோம்.

கண்டோ மொரு கருத்தே அதைக்
காக்குந் துணை யன்பே
வண்டா டிடும் மலரில் இசை
வார்ந் தோடிடும் ஆயின்
கொண்டா டிட விரிதல் அதன்
குணமே — இள — மனமே
துண்டாடிட எவர்தா னுளர்
துனியேன் வரவேண்டும்?

காதல் நிலை யாதல் இணை
காவல் முறை யாகும்
வாதில் பிற தீதில் மனம்
வழுவா தெனில் என்றும்
மாதுன் கனி வால் நான் உளன்
மாறு வுள முண்டேல்
பேதாய் எனக் காரோ நிகர்
பாரோர் புகழ் தருவார்!

*

# ஏக்கம்

என்னைப் பிரிந்தொரு
வாழ்க்கை இலையென்ற
எண்ணம் மிகுந்தவள் நீ
—இன்று
மின்னல் சொடித்து
மறைந்ததென வேறே
வேடிக்கை காட்டி விட்டாய்!?

நெஞ்சிலோ ராலயம்
என்னுரு வைத்துநீ
நேர்ச்சைகள் செய்துவந்தாய்
—கிளியினை
விஞ்சுமுன் பேச்சை
விழைவேன் எனினும்நீ
வேதனை பாய்ச்சு கின்றாய்!

பங்குனி மாதக் கொடுவெயில்
வாழ்க்கையில்
பற்றி வருத்தி யக்கால்
— குளிர்
தெங்கிள நீரெனத்
தாகந் தணித்த நீ
தேற்று திருந்து விட்டாய்!

கூவுங் குயிலைப் பழித்துக்
குரல் தரும்
கோகில வாணியே நீ
—என்றன்
ஆவலை ஊக்கி வளர்ப்பதற்
கோவின்றைக்
காமையெனக் கிடந்தாய்?

அத்தானென் ருயிர
அர்த்தந் தொனித்திட
அன்புநகை யுதிர்ப்பாய்
— இன்றைக்
கித்தரை, சூனிய
வெட்டை வெளியென
என்னைத் தவிக்க வைத்தாய்.

சொட்டும் விழிச்சுடர்ப்
பேச்சினிற் காதலைத்
தூக்கி வளர்த்து விட்டாய்
— இன்று
வெட்டுவாள் தூக்கிய
வீராங்கனை என
வேடம் புனைந்தோ விட்டாய்?

பேச்சினிற் காய்ச்சிய
பால்பழம் சேர்த்து நீ
பேணப் பழகி நின்றாய்
— இன்றோ
காய்ச்சுகிறாய் நெஞ்சைக்
கானல் படர்வதைக்
காணா திருந்தோ விட்டாய்?

ஆடு மயிலுக் கபிநய
மின்றியே
ஆடப் பழக்கி வைத்தாய்
—உன்னைச்
சோடு பிரிந்து நான்
வாழ்வதற் கோர்வழி
சொல்ல மறந்தே விட்டாய்!

நெட்டைக் கனவு
நிலேஎனக் காதலே
நெஞ்சினிற் கண்டனேயோ?
—வெறும்
கட்டிளமை வெறிக்
கற்பனே என்பதால்
காண மறந்தனேயோ?

*

## பித்தன்

---

ஆடும் மயிலுன்னை அப்படியே என்னில்
ஆழப் பதித்து விடும் — இங்கு
சோடாய், மகிழ்ந்தின்பம் துய்க்கும் புறுவினம்
துன்பத்தைத் தூவிவிடும்!

சேவற்பூச் செவ்விதழ்ச் செந்தமிழ்ப் பேச்சினை
சோலைக் குயில் உரைக்கும் — அதில்
ஆவி வருத்துமோர் 'நோய்' புகுந்தே என்னை
ஆண்டியாய் ஆக்கி விடும்!

வான்முக டேறும் மழை முகில் நெஞ்சிலுன்
வண்ணச் சுருட் குழலை — தோற்றி
ஏன்சுடு காட்டுத் தனிமையில் என்றனை
இன்னற் படுத்துவதோ?

மின்னற் சுடர், உன்றன் மென்னகை காட்டி
மேனி எலாஞ் சிலிர்க்கும் — உயர்
கன்னற் சுவையுண வென்னிலும் அன்னது
காஞ்சிரங் காய் நிகர்க்கும்!

பூங்கொடி மெல்லிடை'தேன்குழற்' கன்னங்கள்
'பித்தனுய் ஆக்குதடி' — அன்பு
தேங்கிய உள்ளம் அறிவாய்! இருக்கின்ருய்!
தேற்றுவ தெங்ங னமோ?

மேற்கு வான் சூரியன் மலையிற் படர்கையில்
மென்முலை, மேற்றடங் காட்டுவதேன்? — பின்பு
கூற்றுவன் செய்கையில் ஏற்றம் பெறுவதும்
குற்றுயி ராக்கலும், யார் சகிப்பார்?

நாவற் பழக் கண்ணுல் காதற் பெரு நோயை
நெஞ்சினிற் பாய்ச்சிய நீ — இன்று
காவற் பல மென்று கூறுகின்ருய்! உடன்
''கார்'' கொண்டு வந்திடவோ?

*

## நிகழ்த்திடுமோ?

மாலையிலே தினஞ் சோலையிலே அவள்
மாங்குயில் போலிசை பாடுவதும்
வேலைநிகர்த்த விழியினுல் வீதியை
வியர்த்தமாய்ப் பார்த்துக்கண் பூப்பதுவும்
சேலை விதம் விதம் தேடி அணிவதும்
செவ்விதழ் சாயத்தில் மூழ்குவதும்
நூலை அவள் பொய்யாய்ப் பார்ப்பதுவும் அவன்
நெஞ்சினில் மாற்றம் நிகழ்த்திடுமோ?

பச்சைக் கிளியினிற் பேசுவதும் பழக்
கன்னத்தில் தீஞ்சுவை சேர்ப்பதுவும்
நச்சுக் கருநாகம் போன்றலை பின்னலை
நாணத்தொடு பற்றி ஆட்டுவதும்

இச்சைபழுத்த பழமெனக் கொங்கைகள்
எண்ணத்தில் ஈட்டியைப் பாய்ச்சுவதும்
இச்சையைக்கொள்ளுமோ? இணையில் புலவனின்
எண்ணத்தில் மாற்றம் நிகழ்த்திடுமோ?

கண்ணில் எமனைப் புகுத்துவதும் உள்ளக்
கருத்தை யவனிற் செலுத்துவதும்
விண்ணின் எழில்தன்னை மெல்லுடல் சேர்ப்பதும்
விந்தைப் பெருமூச்சு வீசுவதும்
வெண்ணகை முல்லையைக் காட்டுவதும் கையை
வீசிநடப்பதும் கூசுவதும்
எண்ணுவானென்றே! இணையில் புலவனின்
எண்ணத்தில் மாற்றம் நிகழ்த்திடுமோ?

*

# எழும்பு

பாலன்ன மென்னடையால்
  பட்டதடி நெஞ்சில்
வேலன்ன நீள்விழியும்
  விட்டாயே—பாலன்ன
நெஞ்சம் பழுதாகி
  நீள்நோய்க்கா ளாகினேன்
செஞ்சொல் மொழியால்
    திருத்து.

பட்டன்ன மேனிப்
  படர்கொடியாஞ் சிற்றிடையாய்
மொட்டவிழும் முல்லைச்
  சிரிப்புடையாய்—கட்டாயம்
நீயின்றி நானில்லை
  இல்லைநிலா வானின்றி
நோயுற்ற நெஞ்சிடத்தே
    சேர்

சந்தனத்தில் குங்குமத்தைச்
சேர்த்துச் சுடரேற்றி
வந்ததென வாய்ந்த
விருகன்னம்--செந்தேனில்
தோய்ந்த விருவிதழும்
தோன்றும் பிறைநுதலும்
தேய்ந்தோ விடுமென்னைச்
சேர்ந்து?

மார்பிற் பழுத்திருக்கும்
மாதுளையாஞ் செங்கனிகள்
வேர்விட்ட என்நோய்க்கு
வேண்டுவதே – கார்மேகக்
கூந்தல் துடைக்கவளை
கூர்மூக்கின் ஊசியினல்
மாந்தும் மருந்துகளை
ஏற்று.

வாடைக் குளிர்காற்றும்
வான்மதியின் தண்ணொளியும்
பீடைக் குரமூட்டும்
பேராசான் — சாடையிலே
தோகைமயில் வண்மைத்
தொழிலின் பெருவள்ளல்
தேகமதால் ஓம்பத்
திரும்பு.

சேலைத் தலைப்பினிலே
  தென்றல் கதைபேசும்
வேலைப் புரிகூந்தல்
  வேய்த்தோளி—ஞாலத்தில்
காலந் திரையெறியக்
  காத்திருக்கும் கட்டிளமைக்
கோலம் இழப்பதற்குட்
    கூடு.

யாப்பால் உருக்கொண்டு
  நல்லணியால் பூத்தவளே
பாப்புனைய உன்னைவழி
  பார்த்திருப்பேன் — மூப்பில்லா
கன்னித் தமிழணங்கே
  காத்திருக்க வையாமல்
என்னிற் கலக்க
    எழும்பு.

*

# வடு !

சொல்லைக் கணையாய்ச்
செருகுஞ் செயலாலே
இல்லை! பெருமை
இனியீரே — வல்லமைகள்
எல்லார்க்கு முண்டே
இயலு மொருவழியில்
பொல்லாங்கில் நேரும் பழி!

காக்கும் மரபில்
கலகங்கள் வேண்டா எப்
போக்கும் இனிதாய்ப்
புரிந்தக்கால்—தாக்குகின்ற
கொல்யானை தன்னை
அறுகுங் கெடுத்திடுமேல்
வெல்வேன் எனப் பிதற்றல் வீண்.

என்னை எடுத்தும்
எடுத்துக்காட் டுள்நுழைத்தும்
தன்னைப் பெரிதாக்குந்
தம்பியர்கள்—முன்னுக்கு
வந்தால் மகிழ்ந்திடுவோம்
மாருகத் திட்டலிலே
வெந்தாற் சிரிப்பே வரும்.

பொடிவைத்துப் பேசிடுதல்
ஓர்போக் கெவர்க்கும்
வெடிவைத்தல் வீண்வேலை;
வேண்டாம்—வடிகட்டும்
பண்ணுடை பாலின்
பழுதைத் தனதாக்கும்
விண்ணணம் வேண்டாம் விடு.

எங்க ளுயர்குடும்பம்
காய்ச்சல் எரிச்சலினுல்
பங்கப் படுதல்
பழுதன்ப—தங்கம்போல்
நாங்கள் விளங்க
நலனுய்தல் வேண்டுந்தான்
வாங்கல் எழுப்பல் வடு.

*

# தளர்வு

கொல்லையி லோடியுங் குளிர்நில வாடியுங்
கோதை யுறங்கவில்லை — காதற்
போதை இறங்க வில்லை,

ஒல்லை வரு வேனென் றேதிய காதலன்
ஊரை யடைய வில்லை—அவள்
போரும் முடிய வில்லை.

தென்ற லசைந்தது திங்க ளுலா விற்று
தேற்ற ஒருவ ரில்லை—அவை
போற்ற ஒருவ ரில்லை,

அன்றில் குலாவின அன்பால் இணைந்தன
ஆளன் வரவோ இல்லை—அவள்
தோளைப் பரவ வில்லை.

தென்னை யிளங்கீற்றில் சின்னக் கிளிச் சோடு
தம்மை மறந்தனவே—துயர்
வெம்மை பறந்தனவே,

இன்னல் காலைப்பனி எங்கோ பறந்திட
இளஞ்சுடர் தோன்ற வில்லை-இன்னும்
களம் வந்து சேர வில்லை.

குயிலிசை தீற்றின மயிலின மாடின
குமரியோ ஆட வில்லை—வந்தே
தமரின்னும் பாடவில்லை,

வெயில்பட இருள்வரும் வேதனை பலதரும்
துயில் கொள எண்ண வில்லை—இந்த
மயிலாட நண்ண வில்லை!

முல்லை மலர்ந்தன மல்லிகை பூத்தன
அள்ளி இறைத்த துவே – மணம்
கொள்ள உரைத்த துவே,

இல்லையவ ரெனில் இக்கருங் கூந்தலை
அள்ளி முடிப்பவ ரார்?—அவளைப்
புல்லி அணைப்பவ ரார்?

மாரி தொடங்கின யாவும் மலர்ந்தன
மான் மயில் ஆடி னவே — அவள்
தோளின்னும் வாடி னவே,
யாரிடஞ் சொல்வ தவரிதழ் மார்பிடை
யாவும் இழந்திடு வார் — எனப்
பாவை தளர்ந்திடு வாள்.

*

# பிணி

---

காணும் வழியினைக் காட்டியருள் — உளங்
காணும் உன தெழிலை
பேணும் முறையினைப் பெற்றிடுவேன்—அதிற்
பேதைமை விட்டிடு வேன்.

கோபத்தைக்கொன்றே அழித்திடுவேன்-அதன்
கொட்டத்தை மாய்த்திடுவேன்
சாபத்தை நீக்கித் தண்ணருள் காட்டி — நீ
தந்திடுவாய் சமுகம்.

மோகத்தை மாய்த்து மடித்திடுவேன்—எழும்
மோச மெலாந் தவிர்ப் பேன்
யோகத்தால் உன்னில் லயித்திடுவேன் — வருஞ்
சோகத்தைப் போக்கிடு வேன்.

ஆணவப் பேயை அழித்திடுவேன்—அதன்
அற்பத் தனங் களேவேன்
வேணவா யாவையும் வெந்தீயில்—போடும்
வீரியம் பெற்றிடு வேன்.

மாயங்கள் என்னை மயக்கிவிடா —துள்ள
மலரில் அமர்ந் திடுவாய்
நோயெங்கு முண்டேல் அவற்றுள் —மருந்தென
நின்னருள் வைத்திடு வாய்.

உன்னை யறிந்திடு முள்ளமமைத்ததில்
உன்னன்பு தேக்கிடு வாய்
இன்னலே நீக்க எனக்கருள்வாய்—உன்னை
என்னிற் கலந்து விடு.

*

# ஆடினர்!

அந்தரத்திலேப றந்து வந்திடும்
பந்து தேடிய பாவையர்
சுந்தரச் சுனேஇ ரண்டிலே கயல்
துள்ளியோடுதல் போல் விழி
முந்திட இளங் கைகள் தூக்கியே
ஆடினர்—பந்
தாடினர்.

மென்விரல் குவித்தோடுவாள் வரும்
பொன்னுருண்டைபந் தொடுக்கிட
அன்னமென்னு மோர் பெண்ணணங்கதை
அளவாய்த் தூக்கியே யுதவு வாளதை
இன்னெருத்தி யோர் மின்னல் பாய்ச்சியே
ஆடினர்—பந்
தாடினர்.

சேடியர்அள வோடு சேர்த்தவர்
சிற்றிடை யசைந்தாட ஓடுவார்
பாடுவாரிலா ஆடுவா ரென
பந்திலே மயல் கொண்டவர்
கூடியோ ரிரு கூறுளாருமே
ஆடினார் — பந்
தாடினார்.

பின்னலும் பரிக் கூந்தலும் முகில்
அன்னவாங் குழற் கற்றையுஞ்
சென்னியில் இரோ மென்றே ஆடவச்
சிறுக்கியர் குழாஞ் சேர்ந்து மென்
புன்னகை தரப் புள்ளிமானென
ஆடினார்—வலைப்பந்
தாடினார்.

நெஞ்சிலே இருபந் திருத்திய
நாரியர் காற்றில் தாவியே
அஞ்சிடோம் உமை விஞ்சுவோம் என
ஆடுவார் அவர் யாவரும்
கொஞ்சும் மயர் வென்றிலாமலே
ஆடினார்—வலைப்பந்
தாடினார்.

கல்லில் வெட்டிய சிலையாங் கன்னியர்
கருமமே கண் ணுயினுர்
வெல்வதார் உமை வெல்லுவோம்எனும்
வேகம் மேலிட ஆடுவார்
பல்கடித்தும் மேல் பாய்ந்து பாய்ந்துமே
ஆடினுர் — பந்
தாடினுர்.

*

# சோடிகளாவோம்!

தென்றலடிக்குது தெம்மாங்கு பாடுது
தேடி நீ வாராயோ—என்னிடம்
ஓடி நீ வாராயோ?

கொன்றலடிக்குது கூதல் உறைக்குது
கூடிட வாராயோ?—மயிலாய்
ஆடிட வாராயோ?

பூங்கா எழிலெம்மை ஏங்கியழைக்குது
வதுவை சேர்த்திடவே—மயக்க
மதுவை வார்த்திடவே

மாங்கனிக் கன்னங்கள் வாடிட முன்னமே
மானே வந்திடடீ—மலரிதழ்த்
தேனே தந்திடடீ.

கூவுங் குயில் வெறி கூட்டுது, வாட்டுது
கோடை அழற்றுதடி—நெஞ்சில்
வாடை சுழற்றுதடி
தாவும் புருவென நாமும் பறக்கலாம்
பேடே நீ வந்திடடீ—இன்தமிழ்
ஏடே நீ முந்திடடீ.

மின்னலென ஒரு அன்ன நடை காட்டி
மெல்லடி வைப்பாயோ—பகை
கொல்ல நகைப்பாயோ?
வன்னப் பசுங் கிளிக் கன்னல் மொழியினுல்
ஊக்கந் தருவாயோ—என் மன
நோக்கம் அறிவாயோ?

சாதி பணம் என்போர் தாழ்வுயர்வு கூறிச்
செத்து மடிந்திடட்டும்—இன்றேல்
புத்தி பிறந்திடட்டும்
சோதி தருங் காதல் நீதி வழி தனில்
சோடிகளாகிடுவோம்—நாம் இன்ப
சோடிகளாகிடுவோம்.

*

## துயர்

தேவடியாள் பெற்ற
திருமகளச் சாலேயுள
மாவடியில் நின்றேனே
மாய்கின்றாள்—பாவடிவாள்
வார்த்தை அளக்குமொரு
வாயாடிப் பாவலனைப்
பார்த்தாளோ பாவை யவள்.

சோற்றுக்குத் திண்டாடும்
சோம்பேறிப் பாவலர்கள்
பீற்றுவதி லேமட்டும்
பின் நிற்கார்—காற்றினிலே
அள்ளுண்ட தூசாய்
அவர் பின்னால் செல்கின்றாள்
கள்ளுண்ட காதல் வெறி.

சிற்றடிக்குப் பொற்சிலம்புஞ்
செங்கரத்திற் கேவளேயும்
நற்றமிழால் மேகலேயுங்
குண்டலமும் — சொற்றிறத்தால்
தந்திடுவ ரென்றித்
தளிராள் நிணக்கின்ருள்
அந்தரத்து மாளிகையே யாம்.

வானந் தனக்கு
வயப்படவும் மானிலத்தின்
தேனும் இயற்கையெலாந்
தேர்ந்திடவும்—மோனத்
தவத்திடையே மூழ்கித்
தமிழ்பாடு வோன்றன்
தவத் தணலி லின்னுள் தளிர்.

சிட்டாய்ப் பறந்தலேயுஞ்
சிந்தனேயில் இன்சுவையாம்
மிட்டாய் இருக்குமென
மேதையிவள்—தொட்டாளே
மாய்க்கும் விட மருந்தை
மாந்திக் கிடப்பாளேல்
தாய்க்குள் துயரே துயர்.

*

# என்னிடஞ் சொல்வையே

---

வானடி வயிற்றிலே
　　வட்டமாம் வெண்ணிலாத்
தோணிடிற் கடற்கெது
　　தோணுதோ? தன்னுளம்
பேணுதல் யாவுமே
　　பொடியெனச் சிதறிடக்
காணுமோர் மேலுணர்
　　வேனது கண்டது?

மாலையிற் றன்னிதழ்க்
　　கரமெலாங் கூப்பி நற்
சீலமாந் தேவனைத்
　　துதிசெயுந் தாமரை
காலையின் கதிர்வரக்
　　களித்தெழிற் கோலமே
சூழுதல் எங்ஙனம்?
　　சொல்லினுட் படுவதோ?

கானிலே வாழ்ந்திடு
கோலமா மஞ்ஞைகள்
தேனிலே சிந்தையே
தோய்ந்ததோ என்றிட
வானிலே கருமுகில்
வந்ததும் ஆடலேன்?
ஊனிலும் உயிரிலும்
ஊறுவ தெது கொலோ?

கட்டமை மொட்டுகள்
காத்திடும் மௌனமும்
பொட்டென நின்றதும்
பனித்துளி பாயுமோ?
துட்டராம் வண்டுயாழ்
மீட்டிடும் ஓதையின்
கட்டளை கேட்டதோ?
காரணம் என்னவோ?

என்னுளம் ஐம்புல
வுணர்விலும் ஆன்மிகம்
முன்னுற வாழ்குவேன்
மோகமாம் ஒருரு
கண்ணுறில் ஓர் ஒளி
காணுமே என்முகம்
என்னடி சங்கதி?
என்னிடஞ் சொல்வையே.

*

# உறுதி

சிற்றிடையின், மேற்குடத்தை வள்ளி-வைத்தே
சிற்றொழுங்கை யால்வருவாள் துள்ளி
அற்புதமே காற்சிலம்பு பாடும்-அவ்
வடிதொ டர்ந்தே, என்னிதயம் ஓடும்
விற்புருவம் வேல்விழியைப் பாய்ச்சும்-அந்த
வேதனை யிரா முழுதுங் காய்ச்சும்
வெற்பெடிக்குந் தோள்களுமே சாயும்-அவள்
வீங்கிய மார்பிற்புரள மாயும்.

செவ்வரத்தம் பூமலரும் வேளை-அவள்?
செங்கரத்தை வீசவருங் காலை
எவ்வி யெவ்விப் பட்சியினம் பாடும்-கமலி
ஏழையெனப் பொய்கையதில் வாடும்
செவ்வொளியைக் கீழடிவான் கக்கும்-வள்ளி
செவ்வுடலும் அவ்வொளியை ஒக்கும்.
கொவ்வையிதழ்க் கீழ்முனையோ பூக்கும்-அக்
குறுநகையோ என்னுயிரைத் தாக்கும்.

மாலையிலே நெற்கதிரைத் தூக்க-வரும்
மைனுவொடு சிறுபறவை போக்க
சேலையிலே கற்கள்கொண்டு வருவாள்-அவள்
சிரிப்பென்றே கள்வெறியைத் தருவாள்
சோலையிலே வாழ்குயிலோ பாடும்-அச்
செந்தமிழாள் பாட்டதனைப் பாடும்
சேலைபறக்கக் கவணை எறிவாள்-அவள்
சிற்றிடையால் மின்னலைப்போல் முறிவாள்!

பட்டுடலைத் தொட்டணைத்துத் தாலி —மிகப்
பக்குவமாய்க் கட்டுதற்கேன் வேலி?
சிட்டுகளாய் வாழவிடாள் அத்தை—கிழச்
சீமானிடம் நாடுகிருள் சொத்தை!
''பட்டமரம் போலவா நான்வாழ்வேன்
—அத்தான்
பாசமெலாங் கொண்டு கடல் வீழ்வேன்?''
திட்டமிட்டுச் சூளுரைத்தாள் வள்ளி —அந்தச்
சேதியவள் தாய்வயிற்றில் கொள்ளி!

*

# துணிவு

செவ்வாழைப் பூவெனவோர் சிவப்பி—அவள்
செவ்வாயில் வெற்றிலையைக் குதப்பி,
சவ்வாதுப் பொட்டுமொன்று நிரப்பி—அதோ
செல்லுகின்ருள் என்னுளத்தை வெதுப்பி.

கைவளைகள் பாட்டிசைக்கப் போகும்—அந்தக்
காரிகையின் சிற்றிடைகள் நோகும்.
மைவார்த்த கண்ணில் உயிர் வேகும்—உளம்
மாதுளையின் செங்கனிகட் கேகும்.

ஆடுமயில் போலநடைகாட்டி—கன்னம்
ஆடஇரு தோடுகளும் பூட்டி
பாடுகுயிற் செம்மொழியைஊட்டி—என்னைப்
பைத்தியமாய் ஆக்கியவள் தோட்டி.

தோட்டிஎன்றால் என்னுளத்தில் என்னே—கேடு
தோய்ந்துவிடப் போகிறதென் அண்ணே?
பாட்டிகதை சாதிபேதம், முன்னே—என்றன்
பாக்கியத்தின் பூச்சிரிப்பு மின்னே.

நெற்றிநிலாத் துண்டால் ஒளிவீசி—இரு
நீள்விழியும் நஞ்சை அள்ளிப் பூசி
பற்றிஎழும் தாழ்வுயர்வு தூசி—படப்
பார்வையொன்றால் நீறுவிழ வீசி,

சிற்றிடையை என்கரத்துள் சேர்ப்பாள்!
—கொவ்வைச்
செவ்விதழைத் தந்துமுகம் வேர்ப்பாள்!
வெற்றியென்றே வையமெல்லாம் ஆர்ப்பாள்
—பழம்
வைதிகத்தைத் தூசி எனப் பார்ப்பாள்!

*

# துணை

செம்மீனைப் போல ஒரு சிவப்பி—தமிழ்
திரண்ட அமுத மொழி பரப்பி
விம்மியெழும் மார்பில் வெறி நிரப்பி-கயல்
விழிகளினுல் மோகமயல் பரப்பி;

சுருவின் சுழற்சியிலே திரிவாள்-இசைவு
சொல்லாமலே இடையால் முறிவாள்
புருவின் குரலெழுப்பிச் சிரிப்பாள்-இளிக்கும்
புல்லரைத்தன் கண்களினுல் எரிப்பாள்.

மீனவனுக்குப் பிறந்த முத்தம்-அவள்
மோகமதால் பலருக்குப் பித்தம்
தேன்வடியும் கீழதர ஓரம்-கிளிஞ்சல்
தோற்க வருவாள் கடலின் ஓரம்.

தாழை மலர் மணக்கும் பகுதி-ஓர்பால்
தண்ணிளநீர்த் தென்னைகளின் தொகுதி
மாலை மயங்க அவன் வருவான்-வெள்ளை
மணலில் அமர்ந்து காற்று நுகர்வான்.

தூண்டிலிடும் அன்னவனின் கண்கள்-அவள்
தூய நெஞ்சிற் காதல் தரு புண்கள்
மீண்டவள் கண் நெஞ்சகத்தில் பாயும்-அந்த
வேதனைகள் எம்மருந்தால் மாயும்?

அத்திசையும் மித்திசையும் நெருங்கும்-துயர்
அத்தனையுமே கணத்தில் நொருங்கும்
நித்திரை இலை விழிகள் மயங்கும்-தேன்
நிறைந்த இதழ்கள் கூடி முயங்கும்.

இப்படியே எத்தனை நாள் போகும்-மனம்
ஏந்திழைக்கும் ஏந்தலுக்கும் வேகும்
எப்படியோ தந்தையர்கள் தெரிந்தார் –காதல்
இங்கிதத்தின் மென்கருத்தும் புரிந்தார்.

வேளாளனும் மீனவனும் வேறு-படும்
வேதாந்த மெலாம் பொசிங்கி நீறு!
தோழனுக்குத் தோழிவந்து கிடைத்தாள்
—அவள்
தூயபெரு மின்பமெலாம் படைத்தாள்.

காதருக்கும் ருகிலாக்கும் பொருத்தம்—சில
காசிம் பாவாவுக்கேனோ வருத்தம்?
மாதொருத்திக் காண் துணையே வேண்டும்
—சாதி
மந்திரத்திற் கேகுழியைத் தோண்டும்.

*

# நெஞ்சே மற!

நெஞ்சே யுனக்கென் நினைப்போ அறியேன்
கொஞ்சும் மொழியாற் செஞ்சொற் பேசி
மஞ்ஞைக் குழாத்தில் மாநடம் பயிற்றும்
வஞ்சி யெண்ணம் வதைக்கும் வடுவோ?

அச்சம் மடநாண் பயிர்ப்பொடு பண்பு
மெச்சும் அழகில் மெருகு தடவிப்
பச்சைக் கிளிகாள் பயிலுந் தமிழாள்
இச்சைக் கெரிதீ இடுநெய்த் திரியோ?

புகையாங் குழலிற் புரளும் அலையிற்
சிகையாம் வகையிற் றிரியும் நெஞ்சே!
பகையாம் வறுமைப் படையால் வீழ்ந்தாய்
நகையாம் பயனோ நயப்பாய் நின்றே?

வண்டோ மாமணி யோ மான் விழியோ
என்றென் உவமைக் கவியின் வேட்கை?
கண்டோ ருயிருண் கருங்கண் ணவளோ
உன்றோள் தழுவத் துடிக்குங் கொடியாள்?

நாசிக் குவமை நல்கும் பொருளை
ஆசிக் கின்றாய்! அமிழ்தத் திதழைப்
பூசிக் கின்றாய்! பூவை யவளோ
காசுப் பையில் கையிடு கின்றாள்!

கந்தைத் துணிஉன் கரத்தில் திருவோ
டெந்தைக் குணத்தின் இயல்பித் துடிப்பு!
மொந்தைக் கண்ணீ முங்கினை யோசொல்?
வந்தனை நெஞ்சே மறநீ யவளை!

*

## பசி

பொங்கு மிளமைக் கொங்கை நிமிர்த்திப்
பொலிவோடு
செங்கை சுழலச் சிற்றிடை துவளச்
சிரிப் பேந்தி
மங்கை யொருத்தி வந்து மிளிர்ந்தாள்
மய லோடு
கங்கையில் வெள்ளம் கண்டதுபோலும்
உணர் வோட்டம்.

கண்ணிற் கோரப் பசிக்களை மூக்கில்
ஒளி வெள்ளம்
உண்ணத் துடிக்கும் உதடுக ளூறும்
அமு தூற்று
சுண்ணந் துவைந்த மஞ்சட் கலவைச்
சுவைக் கன்னம்
எண்ணக் களத்திற் போரின் பயிற்சி
எக்காளம்.

இருளில் நூற்ற எழிலாம் கற்றைக்
குழ லோடு
புரளும் கடலின் அலையின் வரிசைப்
புரி யோட
உருளும் வியர்வை நுதலில் தளிராம்
விர லாலே
பரவும் பாவை ஏனோ நெடுமூச்
செறிகின்றாள்?

வெட்கம் விரக தாபம் கோபம்
வேறே தும்
துக்கம்? தோகை யெதனுட் கிடந்து
துடித்தாளோ
பக்கம் நெருங்கிப் போனேன் அவட்குப்
பய மில்லை
அக்கம் பக்கம் பாரா தருகில்
வருகின்றாள்.

பவளத் திதழிற் பழகுஞ் சிரிப்புப்
பண் ணோடு
துவளும் இடையில் நடையின் அழகு
தொழி லுக்கே
இவளின் கையின் சரக்கோ? எனக்கும்
இத யத்தில்
தவழும் ஆசை! தையல் கையை
விரிக் கின்றாள்.

*

# தாவு!

வெள்ள மசைக்கு மொரு
புல்லாய் இடை நெளியும்
கள்ளி கயல் விழிகள்
துள்ளும் — அவை
உள்ளம் உறையமைதி
கொல்லும் அதில்
உள்ளம் இனித்திடும் ஓர்
உவகை பிறக்குமதில்
வெள்ளம் பெருக்குநகை
யாலே — இசை
வெள்ளம் பெருக்குமுயர்
யாழே.

வண்ணஞ் சிறக்குமெழில்
வில்லின் கலப்பினிலே
பொன்னின் உருவிலமை
சிலேயே — சிகை

கன்னங் கறுத்தமுகில்
அலையே — நடை
தன்னில் ஒளித்தமயில்
கன்னஞ் சிவந் தகல
என்னுள் நுழைந்துயிரைப்
பறிப்பாய் — இதழ்
விண்ணின் சுவைநறவை
நிறைப்பாய்.

வட்டப் பெருமதியில்
ஒட்டு முறவதனுல்
சொட்டும் ஒளிக்குளிர்மை
முகமே — உளந்
தொட்டு மயலெழுப்பி
நகுமே — கமல
மொட்டு விரியாவிளை
முகையாந் தனமிரண்டும்
வெட்டும் பொறுமையது
மாயும் — தறி
கெட்டே எனது மனம்
பாயும்.

தேனில் துவைந்தமலர்
மீதில்அ மர்ந்தகலை
வாணிக முத்தைஒக்கும்
சங்கம் — அதுவோ

ஈனுங்க லைபெரிய
வங்கம் — அதில்
கானுங்கு ளித்து முகில்
ஆகிக்க னிந்து கவித்
தேனைஇ றைக்குமழை
ஆவேன் — எழு
வானிற் பறக்க வெனில்
தாவேன்.

*

# பெண்மை

மாதாவின் பாதத்தே சுவர்க்க மென்று
மறை தந்த மாநபியார் மணி மொழிக்குக்
காதோடு சுவை பாய்ச்சிக் களிப்பில் மூழ்கிக்
கண்ணுக நாம்மதித்தோம் பெண்மை. தெய்வத்
தூதாகி வையத்தில் தூய்மை மேவித்
தருவார்கள் பண்போங்குசேய்கள். நல்ல
போதங்கள் நீராகப் புரியுந்தொண்டு
புரையோடு மெருவாகப் புதுமை வாழும்.

அகழ்வாரைத் தாங்கு பெருநிலமாய் பெண்கள்
அமைந்தார்கள்; தியாகத்தால் பொறுமை
அன்பால்!
புகழ்பூக்க வாழ்ந் தில்லப் புதுமை கண்ட
பயகாம்பர் மகள் பாத்துமுத்தின் பாதை
திகழ்கின்ற அறப்பாதை தியாகப் பாதை
திருப்பாதை எந்தாய்கள் தொடரும்பாதை
இகழ்வோட்டி இஸ்லாத்தின் பெண்கள் வாழ
இயலமைத்த திருநபியால் பெண்மை வாழ்க.

பெண்ணியலார் இன்பத்தின் போதைசேர்க்கும்
பெற்றியுளார் எழிலான பொன்னி னங்கம்
கண்பறிக்கக் கருங்குழலுந் திரண்ட மார்பும்
காமத்தின் கனிச்சாறே என்றி ருந்த
புண்ணன வாழ்க்கையினைப் போக்கி இந்தப்
புவியினிலே பெறும்பேறு பெண்மை என்று
கண்ணென்றாய்க் கருதியவர் உரிமை காட்டிக்
கருத்தினிலே ஒருபுதுமை தந்த திஸ்லாம்.

பெரும்புவியும் பெண்மையினால் பெருமை
காணும்
பெருவிழிப்பும் அவர்களினால் விளைதல் கூடும்
அருமை யுடன் பாலூட்டும் போதே நல்ல
அறம்வீரம், அகத்தூய்மை, அன்ப டக்கம்
திருமறையின் தெளிதேனுந் தியாகம்,
தொண்டு,
தீமையினை வெறுத்தொதுக்குந் திரம் யாவும்
வருங்கால வையத்தைப் புனித மாக்க
வழங்கிடுதல், அவர்கடமை, பண்பும் ஆகும்.

ஊற்றெடுக்கு மன்புண்டே ஊறு காணின்
உடைத்தழிக்கும் பெருவெள்ளத் தீயுமுண்டே
ஆற்றாமை யாலடைந்த அடக்க மல்ல
அவரணியும் முக்காடு நம் ஆண் பாலார்க்
கூற்றாக எழுகின்ற உணர்ச்சிக் கான
உறுப்புகளைப் பேணுதலே! இதுகா ணுத
தூற்றுதலே அவர்மதியார் தொழுகை
நோன்பில்
தொடர்வதுமே அவர்திண்மை அறிவீருண்மை.

*

# மனையறம்

---

ஆண் :

*நித்தம் உழைத்தே அலுத்து வருகையில்*
*நின்இதழ் பூக்கும்அம் முல்லைச் சிரிப்பிலோர்*
*சத்தைப் பெறுவேன்; சமையலை உண்டதும்*
*சாந்தி அடைகிறேன் கண்மணியே—உயர்*
*சாந்தி அடைகிறேன் கண்மணியே!*

பெண் :

*முல்லைச் சிரிப்பெனப் பல்லை இழித்துநாம்*
*மூலையுறைந்த அக்காலம் போச்சே—இப்போ*
*சொல்லைச் சுவையாக்கிப் பேசிப் பயன் என்ன*
*சோருக்கிப் போடவே ருளைப்பாரு—இனிச்*
*சோருக்கிப் போடவே ருளைப்பாரு!*

ஆண்:

ஓடிஉழைத் தென்றும் நான்வருவேன் அந்த
ஊதியம் உன்னிடந் தான் தருவேன்
வாடிவரும் என்றன் வாட்டம் தவிர்த்திட
வண்ண வண்ணச் சேலைநான் தருவேன்
—பெண்ணே
வண்ண வண்ணச் சேலைநான் தருவேன்.

பெண்:

சேலை, உடுத்துச் செஞ்சாயமும் பூசியே
சிங்காரிக்க நாங்கள் வேசியில்லை—எந்த
வேலையுஞ் செய்தே பிழைப்போ மென்று கூடி
விண்ணதிரக் கோசஞ் செய்திடுவோம்
—பெண்கள்
விண்ணதிரக் கோசஞ் செய்திடுவோம்!

ஆண்:

கன்னிப் பெண்கள் கடும்வேலை செய்தால் நல்ல
காலம்பிறந்து விடாதென் அன்பே—உன்றன்
மின்னிடையும் நல்லமெல் லுடலுங் கெட்டு
மெத்த விகாரமாய் ஆகிவிடும்—கண்ணே
மெத்த விகாரமாய் ஆகிவிடும்!

பெண் :

உத்தியோகம்பார்த் துயர்ந் திடுவோம்எங்கள்
ஊருக்குழைத்து நலந்தருவோம் மக்கள்
மத்தியில் பெண் அடிமையில்லையென்றே
மானத்தைக் காத்து மகிழ்ந்திடுவோம் —செத்த
மானத்தைக் காத்து மகிழ்ந்திடுவோம்!

ஆண் :

பெற்றவற்றுள் பெருஞ்செல்வமாம் எங்களின்
பிள்ளை வளர்ப்பது யார்கிளியோ — அவர்
கற்றுப் பெரும்புகழ் பெற்றுமகிழ்ந்திட
கல்விஅளித்திட யாருளரோ—முதற்
கல்விஅளித்திட யாருளரோ?

பெண் :

சொத்து சுகம் மற்று நாட்டுநடப்பில்
சுதந்திரந் தந்திடில் யார்மறுப்பார்? என்றன்
அத்தான் உரைத்தவை அத்தனையும் மெய்யே
அன்பால் மனையறத்தை அமைப்போம்—இனி
அன்பால் மனையறத்தை அமைப்போம்!

*

# பிரிவு

கட்டித் தயிர் தொட்டுப் பிசை
　　காந்தள் மலர்க் கைகள்
பிட்டுத் தர வுண்பேன் உளம்
　　பெரிதும் மகிழ் வெய்தும்;
வட்டக் கரு விழியாள் அகம்
　　மகிழும் நடைபோடும்
குட்டிப் பயல் நினைவும் அவள்
　　பிரிவும் எனைக் கொல்லும்.

என்னோடுளம் ஒன்றாகிய
　　உயிராள்தரும் கனிவும்
குன்றாமணி விழியான மகன்
　　கொட்டும் உயிரன்பும்
கொண்டாடிடும் பொழுதிற் செய
　　லகம் என்றனை மாற்றின்
நின்றாடிடும் பிரிவுத் துயர்
　　நெஞ்சோடுறை கறையான்.

பள்ளிச்சிறு பாலர் வர
பழகின் தமிழ் மொழியை
அள்ளித் தருமென்றன் மகன்
அமுதம்தரு பேச்சும்
கள்ளின் வெறிவரு செவ்விதழ்
கனியச் சுவை தருகும்
கள்ளிப்பெடை நினைவும் எனைக்
கலந்தே வதை செய்யும்.

நெட்டைப் பகல் முழுதும் அயல்
நிகழும் பல செயலால்
வெட்டுப் பட விரியும் இரா,
விரியுந் துய ரதுவும்
சுட்டிப் பய லவனும் அவன்
சுவையில் மகிழ் பவளும்
இட்டுத் தர வனலிற் புழு
வாவேன், உளம் வேவேன்.

தூக்கம் வரும் தொடர்வாள் துணை
தோள் மேல் விளையாடி
ஏக்கந்தீர மகனும் எனை
இழுப்பர் துயர்க் காடு
ஊக்கம் தர யார் தா னுளர்?
உருக்கும் துயர்ப் பரிவின்
தாக்கம் இனிச் சகியே னெனில்
தகிப்பை எவர் அறிவார்?

# கலை மடந்தை

கொஞ்சுஞ் சதங்கை யொலி
நெஞ்சிற் படர அவள்
பிஞ்சாம் இடைமுறிய அசைந்தாள் — கலை
தஞ்ச மடைந்தவுடற்
செஞ்சொற் கவிதை நயம்
நெஞ்சில் எடுத்துமுகம் வரைந்தாள்—கையால்
விஞ்சுபுகழ்க் கதைகள் புகன்றாள்.

வட்டக் கரிய விழி
சொட்டுங் கலையுணர்வை
தட்டி எழுப்பி விளையாடும் — முக
மொட்டு மலர நிலை
கெட்டே அலை அளியாய்
தொட்டும் அணைய இசைபாடும்—அயிற்கண்
குட்டிக் கரண மடித்தோடும்.

தோளை அசைத்து, மயில்
தோகை விரித்ததென
ஆளை மயக்க நடமாடி—மெல்லக்
காலைப் பெயர்த்தும் உயர்
தாளங் கெடாவகையில்
மேலே யுயர்த்து மொருகையால்—கலை
நூலையுணர்த்துமொரு கையால்.

ஒன்பான் சுவை திரட்டி
என்பால் அளிக்கு மவள்
அன்பால் அகில முழுதாடும் – தமிழ்ப்
பண்பால் மகிழ்வு தரும்
பெண்பாற் கருத் திழந்தேன்
முன்பாய் வரஅவட்கேன் வெட்கம்
— கலைமடந்தை
நண்பால் கிடைப்பதுவே சொர்க்கம்.

*

# பேறு

வெண்ணிலாச் சேற்றில் மேலே
வான்வடி சேறு சேர்த்துப்
பண்ணிய வுடலாள் தங்கப்
பதுமையாள் அவட்கு வாய்த்த
கண்களோ மல்லிகைக் குள்
கருவண்டுக் கலவை மங்கை
முன்னுயர் நாசி மோகப்
பூவவள் கழுத்தோ சங்கம்.

கொடியிடை மின்னல் வீச்சுக்
குளிர் நகை வானின் வில்லே
கடிகருங் கூந்தல் மாரிக்
கருமுகில் மாதுளைக் குள்
குடியுள மணிஅம் பற்கள்
குளிர் நிலாத் துண்டம் நெற்றி
கடிகமழ் ரோசா கூட்டிக்
கடைந்த தேன் – செவ்விதழ்கள்?

ஆசையின் தேக்கம் செம்பொன்
னருங்கல மார்பி ரண்டும்
பேசிடிற் குயிலே பாதம்
பெயர்த்திடில் அன்னம்; செங்கை
வீசிடில் உளமே ஆடும்
வீங்கிய மார்பின்கீழ் நெய்த்
தோசையாம் வயிறு; பின்னல்
தோன்றிடுஞ் சுரக்காய்ப் பாதி.

நாய்நாக்குப் பாத நங்கை
நளினத்தில் இதயம் மூழ்க
வேய்த்தோளை விரிநடந் தோள்
விரிவுக்குள் ஒருமை யாக்கி
மாய்ந்திடும் உவமை யோட்டம்
கவிஞரின் கவிதா சாலம்
பேய்இருள் உடலின் வேட்கை
பின்னிடும் உடலிரண்டு.

காமத்தில் எழிற் சுமக்கும்
கன்னியர் பார்ப்ப தில்லை
சாமத்தில் கூத்தரங்கில்
சதிராடிக் கண்ட பேறு
நாமத்தை சுமக்க, தொல்லை
நமக்கிடச் சனப் பெருக்கம்
பூமெத்தையான வாழ்வு
புல்மெத்தை யாகும் நாளில்.

## வரம்

மோனத் தவமிருப்பேன்—வான் ஏற
முத்தி பெறவேண்டும்!
கூனற்பிறைத் தோணி—வந்தெனைக்
கொண்டும் வரவேண்டும்!

நீலவானக் கடலில்—வெள்ளியுடன்
நீந்தும் அருள் வேண்டும்!
கோலக் குயில்போலே—தமிழிற்
கூவும் இசை வேண்டும்!

பாடுந் தமிழோடு – மாலைவான்
பக்கம் வரவேண்டும்!
ஆடும் மயில்போல – கூத்திட
''அழகி'' வரவேண்டும்!

ஊஞ்சல் அமைத்திடற்கு — வானவில்
ஒன்று வரவேண்டும்!
தீஞ்சுவைப் பாவிசைத்தே — உந்திவரச்
செந்தமிழ்ப் பெண் வேண்டும்!

மின்னற் பிளவூடே — அண்டமெலாம்
மேவும் வரம் வேண்டும்!
முன்னைக் கடல்கவர்ந்த — கலைப்பொருள்
மூழ்கிப் பெறவேண்டும்!

ஓய்ந்த நேரமெலாம் — தமிழ்க்கவி
ஓடி வரவேண்டும்!
பாய்ந்து வரும் ஒளியில் — மக்களிடை
பாய விடவேண்டும்!

மேகப் படுதாவோ — டெனக்கொரு
மெத்தை தரவேண்டும்!
சாகும் நிலைவரினும்—தமிழ்க்கவி
சாற்றி வரவேண்டும்!

*

# முடிவு?

பால் வார்க்கும் நிலா! உலகைப்
 பகலாக்கும் வேளை
பாதிஇரா! நேரம்நான்
 படுக்கைமேற் கிடப்பேன்!
மேல் எழுந்து மென்கரத்தால்
 தலைவருடிக் காதில்
மெல்லிசையால் கலகலெனச்
 சிரித்துப்பின் எழுந்து
கால் ஆட்டிக் கொண்டிருப்பாள்!
 கண்ணுடும் ஆட்டம்
கவிதைக்கும் அடங்காது!
 கொவ்வை இதழ் முனையின்
மேல் ஆடும் ஒளிக்கற்றை!
 மூக்குக்குந் தாவும்
முடியாது படுத்திடவுஞ்
 சிலைவடிக்க எழுவேன்!

தவழ்கின்ற தென்றலிலே
தளிருடலைக் காண்பேன்!
தள தளக்கும் விண்மீன்கள்
அவள்சிரிப்பைக் காட்டும்,
கவிழ்கின்ற நீர்வீழ்ச்சி
கற்கள்மேல் விழும்
களித்தாடி அவள்பாடும்
இசையென்னைச் சூழும்!
துயில்கின்ற சேய்தொட்டில்
பசிமீறி அழுதென்
துணைவிக்கு விழிப்பூட்டும்!
அவள் என்னைப் பார்ப்பாள்!
கவியோடு குலவித்தேன்
புனலாடல் காண்பாள்!
கடுங்கோப மாகிப்பின்
வருமாறு சொல்வாள்:

''வீட்டோடு விளையாடும்
வேதனைக்கு வாழ்ந்து
விட்டபடி இருக்கின்ற
வறுமைத் துப்பாக்கி
வேட்டுக்குப் பலியாகி
இருக்கின்றோம்! ஏனோ
வெங்கானல் அனல்வீச்சில்
குளிர்தேட வேண்டும்?

பாட்டுக்கும் கூத்திற்கும்
பழங்காலம்! வள்ளல்
பாரிகுலம், தமிழ்வளர்த்த
பாண்டியர்கள் இல்லை!
ஆட்டத்தில் கவிப்பெண்ணாள்
ஓட்டத்தில் நீங்கள்
அநியாயம் பசித்துயரால்
மாண்டிடத்தான் வேண்டும்?''

இல்லாளின் சொல்லுக்கே
இணங்கிவிட்டால், மயிலாய்
என்முன்னே நடமாடும்
துள்ளுதமிழ்க் கவிதை,
நல்லாளும் மல்லுக்கு
நிற்பாளோ? மறுத்தால்
நல்லதுணை மனையாளும்
குழவிகளும் அந்த
பொல்லாத வறுமைக்குப்
பலியாக வேண்டும்!
புரியாது! வழிஒன்றுந்
தெரியாது நிற்பேன்!
செல்லாத காசாகும்
வாழ்வெனினும், கவிதை
சொல்லாத நாவுக்கு
வாழ்வென்னவேண்டும்?

*

# தக்பீர் முழக்கம்

அல்லாஹு அக்பர்! அல்லாஹு அக்பர்
அவனிக் கவன்புகழ் அன்றியிலை எனும்
தக்பீர் முழங்குது கேள்! —அக்பரின்
தக்பீர் முழங்குது கேள்!

மக்களை இந்த மானிலம் யாவையும்
தக்க முறையினில் சிருஷ்டித்த வல்லானின்
தக்பீர் முழங்குது கேள்!—அக்பரின்
தக்பீர் முழங்குது கேள்!

மக்காவில் ஹஜ்ஜின் மகத்துவம் பேசவும்
மற்றுள கஃபாவில் மக்கள் குழுமவும்
தக்பீர் முழங்குது கேள்!—அக்பரின்
தக்பீர் முழங்குது கேள்!

ஹக்கன் அவன்நிலை காண்பவன் ஆதலின்
தக்க னவன்பாதம் தஞ்ச மெனுமுயர்
　　தக்பீர் முழங்குது கேள்!—அக்பரின்
　　தக்பீர் முழங்குது கேள்!

மக்கள் சுகம்சொத்து மாறும் உலகினில்
மாற்றமே யில்லாக் கருணைப் பெருங்கடல்
　　தக்பீர் முழங்குது கேள்!—அக்பரின்
　　தக்பீர் முழங்குது கேள்!

இல்லாருக் கீய்ந்தும் இருப்பவர் வாழ்கென
எல்லார்க்கும் நல்ல இனியவை கூறியும்
　　தக்பீர் முழங்குது கேள்!—அக்பரின்
　　தக்பீர் முழங்குது கேள்!

மக்க ளெலாஞ்சமம் மாண்புறு சோதரர்
துக்கந் தரும் பேதம் தொடாதீ ரெனுமிறைத்
　　தக்பீர் முழங்குது கேள்!—அக்பரின்
　　தக்பீர் முழங்குது கேள்!

சித்தம் செயல்மூச்சு தியாகச் சுடர்பெற
பக்தியாய் அல்லாஹ்வின் பாதம் பணிந்தவர்
தக்பீர் முழங்குது கேள்!—அக்பரின்
தக்பீர் முழங்குது கேள்!

தியாகத்தின் சின்னமாம் ஹஜ்ஜின்
பெருமையை
சிலாகிக்க எம்மைச் சேர்ந்த பெருநாளில்
தக்பீர் முழங்குது கேள்!—அக்பரின்
தக்பீர் முழங்குது கேள்!

*

# நோன்பில்...

---

தேங்காய்ச் சொட்டுப் போற்பிறை வானில்
தெரிந்தாச்சு – தீனின்
துய்ய றமழான் மாதம் அகிலம் பிறந்தாச்சு
பாங்காய் நோன்பைப் பழகும் உள்ளம்
திறந்தாச்சு – அதன்
பண்புகள் எங்கும் தீனின் சுடராய்
நிறைந்தாச்சு.

பகலில் எந்தப் பழகிய உணவும்
தவிர்ந்தாச்சு—தெய்வப்
பரவச உணர்வு மனத்தினில் தங்கி
மலர்ந்தாச்சு
அகிலத் தெங்கும் வைகறை விழிப்புச்
சுடர்ந்தாச்சு—சகர்
அருந்தும் உணவோ டிறையின் நினைவும்
பதிந்தாச்சு.

உருவின் நிழலாய் ஒன்றிய பழக்கம்
ஒழிந்தாச்சு—இந்த
உலகின் உயர்ந்த அமிழ்தும் பகலில் கழிந்தாச்சு
பருவக் குறும்பில் படரும் உணர்வும்
அழிந்தாச்சு—இறை
பகர்ந்த நோன்மைக் கடனில் உள்ளம்
விழித்தாச்சு.

எட்டுத் திசையும் இஸ்லாம் உயர்ந்து
எழலாச்சு—முடி
இலங்கு மரசும் நோன்பின் பசியில் விழலாச்சு
பட்டுத் துணியும் பஞ்சை பசியைப்
பார்த்தாச்சு — நோன்புப்
பண்பால் ஏழை துயரும் எங்கோ சேர்ந்தாச்சு.

சமத்துவம் சாந்தி சோதர பாசம்
பிறந்தாச்சு — வெற்றுச்
சாதி பேத உயர்வு தாழ்வு பறந்தாச்சு
துமித்திடு வர்க்கம் தோலின் வேற்றுமை
துறந்தாச்சு — இந்தத்
துய்ய நோன்பில் உள்ளத் தீமை இறந்தாச்சு.

*

# துதிப்பாய்!

ஆண்டவனைத் துதிப்பாய்—மனிதா
ஆற்றலினை மதிப்பாய்—இறை
ஆற்றலினை மதிப்பாய்

வேண்டும் வரமவன்
பாங்கிலுள வருள்
பூண்டவன் அன்னவன்
புண்ணியம் வேண்டிடில்
ஆண்டவனைத் துதிப்பாய்—மனிதா
வெறும்—ஆசைகளைத் துறப்பாய்!

எல்லாம் படைத்தவன்
எங்கும் நிறைந்தவன்
அல்லாஹ் அவன் தூதர்
அன்பு முகம்மது
சொல்லும் வழியதடா—மனிதா
சேரும் வழி யதடா.

ஆளும் இருபுவி
ஏழும் உடையவன்
சூழும் பொருள்களில்
தோன்று மவனருள்
நாளும் வணங்கிடுவாய்—மனிதா
நல்வழி கண்டிடுவாய்.

ஹக்கன் அவன் புகழ்
மிக்கோன் அதனுலே
மக்கள் தினமைந்து
வேளை தொழுதிடல்
மிக்க பொருத்த மடா—மனிதா
பக்க மிருத்திடடா.

*

## அருள்புரி !

அடிமைக் கருள் புரிவாய்—இறை
அகத்தில் நிறை தருவாய்
குடிமைக் கொரு முடியே—உயிர்க்
குலத்தின் உயிர்க் கருவே
அடிமைக் கருள் புரிவாய்—இறை
அகத்தில் நிறை தருவாய்.

வாழ்வே உயர் ஜீவன்—அதில்
வாழும் உனதன்பு
ஏழ்மை எனக் கில்லை—உன்றன்
இரக்க மெனக் குண்டேல்
அடிமைக் கருள் புரிவாய்—இறை
அகத்தில் நிறை தருவாய்.

ஓச்சும் அர சனதே — நெறி
ஒழுகும் முறை எனதே
பேச்சுஞ் செயல் மூச்சும் – சுடர்
வீச்சாய் வெளி வரவே
அடிமைக் கருள் புரிவாய்—இறை
அகத்தில் நிறை தருவாய்.

ஏவல்தர நடப்பேன்—அதை
ஏவிக் கறை துடைப்பேன்
காவல் முறை யுனக்கே—அறங்
காக்கும் பொறுப் பெனக்கே
அடிமைக் கருள் புரிவாய்—இறை
அகத்தில் நிறை தருவாய்.

மண்ணில் உடல் கொண்டேன்—தீயும்
வணங்கும் நிலை கண்டேன்
விண்ணும் வலம் வருவேன்—ஆணை
விடுக்கு முன தருளால்
அடிமைக் கருள் புரிவாய்—இறை
அகத்தில் நிறை தருவாய்.

*

# அணை

வெண்புகை ஒத்த பெண்புரு நின்று
வேதனையில்
தன்துணை எண்ணிச் சஞ்சல மிக்குடைத்
தானமை போல்
விண்புவி மேவிடு வித்தகன் உன்னடி
நீழலிலே
இன்புற ஆன்மா இரக்கின்ற தென்றன்
ஏந்தலையே

மூத்த முதலாய் முடிவாய் விளங்கும்
முத்தனிலே
ஏத்து புகழின் இறுதிவரையும் இருந்ததனை
பேர்த்தே ஆசை அடங்கா மனித
அங்கமதில்
சேர்த்தாய் இறைவா செகத்தில் இனிக்கும்
செயலிதுவோ

விட்டுப் பிரியா விந்தைச் சுகத்தின்
மேன்மையிலே
ஒட்டி உறவில் உணர்ந்த பெருமை யாவினையும்
நட்டப் படுத்த நலிந்த மனித உடலினிலே
ஒட்டப் பணித்தாய் இறைவா சீற்றம்
உனக்கதிலோ

உன்னிற் சுடர்ந்தே உனக்குள் மகிழ்ந்து
உலகிற்குத்
தன்னை அனுப்ப எழுந்த உணர்வில் இங்குற்றே
தன்னந் தனியாய் தலைவா உனையே தாவிடவே
எண்ணித் தவிக்குங் கருணைக் கடலே
கண்திறவாய்

சக்திச் சுடராய் தனியாய் அருளின் தாயாகிப்
பக்தர் மனத்தே படர்ந்தாய் இறையுன்
பிரிவாலே
உக்கி உலர்ந்து ஒளிவாந் திரளின் உறவிற்கு
மிக்க விழையு மான்மா தன்னை அணைப்பாயே.

*

## அவசரம்

---

செய்யுந் தொழிலிற் சிந்தை தனிலே
நெய்யுங் கருத்தில் நிகழும் பலவில்
ஐயங் கொளலில் ஆசைப் பெருக்கில்
மெய்யின் அழகை முகர்தல் எதிலும்
அவசரம் எங்கும் எவர்க்கும் அவசரம்.

காலம் மனித வாழ்வைக் கீறிக்
கோல மிடுதல் குறிக்கோ ளதனுல்
நாளும் முதுமைச் சீலேப் பதித்துத்
தோலில் திரைகள் ஏற்றி வரவே
அவசரம் எங்கும் எவர்க்கும் அவசரம்.

கொஞ்சுங் குழந்தை குலவும் மனேவி,
துஞ்சும் மனிதர் தொடருந் துன்பம்
அஞ்ச வெதிரிற் ருேன்றும் அவனி
விஞ்சுந் தேவை மிகவே யதனுல்
அவசரம் எங்கும் எவர்க்கும் அவசரம்.

பழியாம் பிறப்பும் பருவக் கடுப்பும்
விளையும் ஆசை வேட்கை பலவும்
சுழியாய்க் கிறங்கும் சுரப்பை வடிக்க
வெளியாய் வருமோர் மனிதப் புழுவால்
அவசரம் எங்கும் எவர்க்கும் அவசரம்.

உண்ணும் உணவும் உடையும் வீடும்
பின்னும் பெருகும் வினையால் கூடுஞ்
சின்னத் தனமாம் செயலால் தேவை
எண்ணத் தொலையா ததனுல் உலகில்
அவசரம் எங்கும் எவர்க்கும் அவசரம்.

இருவர் செய்யுந் தவறின் தண்டம்
உருவைப் படைத்தல், அதனுல் திருவைச்
சிறுமை வழியில் சேர்த்தும் பெருமை
நிறுவத் துடிப்பர் எனவே உலகில்
அவசரம் எங்கும் எவர்க்கும் அவசரம்.

வாழும் ஆண்டு நூறும் அதற்குள்
சூழும் ஆசைத் தேவை கோடி
பாழாம் உயிரும் உடலும்; எச்சம்
வாழும் வகையும் வழியுந் தேட
அவசரம் எங்கும் எவர்க்கும் அவசரம்.

*

## நீ யார் ?

இனிதான கனியளிக்கும்
இன்நிழல் மரங்கள், ஆங்கு
கனிபிழிந் தன்ன ஓசைக்
கடலலை நல்கும் புட்கள்
பனிதங்கு புல்லினோடு
மாமிசம் உண்ணும் மாக்கள்,
நனிஎழி லோடு மின்னும்
நாகங்கள் யாவி னுள்ளும்
மனிதா நீ யார்? இம்மண்ணில்
மதிப்புள்ள ஜந்து நீயா?

ஓதிய மறைகள் உன்னை
உயர்ந்தவன் என மொழிந்தே
தோதாகி உலகும் உன்றன்
சுகத்திற்கு வளையு மென்னும்!
பாதார விந்தம் சென்னி

பணித்திடும் சிருஷ்டி! நல்ல
ஆதாரம் அமரர் உன்றன்
அடியினைக் கௌரவித்தார்!
மனிதா நீ யார்? இம்மண்ணின்
மதிப்புள்ள ஜந்து நீயா?

ஆந்தையின் அலறலுக்கும்
அர்த்தம் நீ காணு கின்றாய்
சேர்ந்த ஓர்காகம் கத்த
சிந்தையை இழப்பாய் பூனை
பாய்ந்திடிற் பயந்து போவாய்
பல்லியின் நச்சொலிக்கே
மாந்திடு வாய்உ னக்கே
இவையெலாம் உயர்ந்த தாயின்—
மனிதாநீ யார்? இம்மண்ணின்
மதிப்புள்ள ஜந்து நீயா?

சிங்கத்தின் கர்ச்சனைக்கும்
சிறுத்தையின் உறும லுக்கும்
தும்பியின் பிளிற லுக்கும்
சீறிடும் பாம்பி னுக்கும்
தங்குநீர் முதலை கட்கும்

தாங்குமோ உயிர் என்றீங்கு
வந்தித்து வாழு கின்றாய்;
மறையினால் உயர்வு கண்டாய்!
மனிதா நீ யார்? இம்மண்ணின்
மதிப்புள்ள ஐந்து நீயா?

காற்றிற்கும் பனிக்கும் நீலக்
கடலுக்கும் இடி மழைக்கும்
தோற்றிடும் விசும்பி னுக்கும்
தொல்புகழ்ப் பூமித் தாய்க்கும்
ஆற்றாமல் அழிகின்றாய் உன்
அறிவுக்குள் அடக்காய் நீயோர்
நாற்றுக்குள் முளையதனால்
நானிலம் பெருமை பேசும்
மனிதா நீ யார்? இம்மண்ணின்
மதிப்புள்ள ஐந்து நீயா?

*

# நிகருண்டோ ?

சிற்றருவிப் பாய்ச்சலிலே,
தென்றலிலே மலையின்
சிகரத்தில் தவழ்கின்ற
முகில்களிலே மாலைச்
சிற்றாற்று வடிச்சலிலே
சிரிக்கின்ற ஒளியில்
திரிகின்ற இளமிருட்டின்
கலப்பினிலே வானின்
முற்றாத இளம்பிறையின்
வளைவினிலே வெள்ளி
முறுவலிலே மெய்சிலிர்க்கும்
மின்னலிலே சுவையைப்
பெற்றாலும் உயர்கவிஞன்
பேனைக்குள் நின்றே
பெருகி வருங் கவிதை தருஞ்
சுவைக்கு நிகருண்டோ?

ஒளிஉமிழும் காலையிளம்
பரிதியிலே பசும்புல்
நுனிகளிலே தொங்குபனித்
துளிகளிலே தோன்றும்
வெளியினிலே, குளிர்புனலில்,
நீந்திவரும் மீனின்
வெள்ளிய நற்செதிள்களிலே,
அசைவினிலே கமலத்
தளிரிதழின் செம்மையிலே,
தேனுண்ட வண்டின்
தாளத்தோ டிணைகின்ற
பண்ணிசையில் உள்ளங்
களிக்கின்ற சுவையுண்டே
ஆனாலுங் கவிஞன்
கற்பனையில் படைக்கின்ற
கவிச்சுவைக்கு நிகரோ?

பேச்சினிலே களிப்பூட்டும்
பசுங்கிளியில் சோலைப்
பெருங்கிளையிற் கூவுகின்ற
குயிற்பேட்டின் இசையில்,
வீச்சோடு தோகைவிரித்
தாடுகின்ற மயிலின்
நடனத்தில் புருக்களிலே
மான்கன்றின் சொந்தப்

பாய்ச்சலிலே பசுங்கன்றின்
துள்ளலிலே எல்லாம்
பாய்ந்தோடும் சுவையுள்ள
தாளுலுஞ் சொந்த
மூச்சினிலே உயர் கவிஞன்
வடிக்கின்ற கவிதை
முன்னிருட்டு நிலாவென்பேன்!
சுவைக்கு நிகருண்டோ?

வண்ணமலர்க் கூட்டத்தில்
கனிந்தபழக் குலையில்
வளர்கின்ற இளந்தளிரில்
காற்றணையுங் கிளையின்
விண்ணோடு மொழிபேசும்
மெல்லொலியில் மெத்தை
விரித்தாற் போற் பரந்துள்ள
புல் வெளியின், பசிய
தன்மையிலே, நிழலாடும்
தண்மையிலே எல்லாம்
நீங்காத சுவையுள்ள
தாளுலுங் கவிஞன்
எண்ணத்தில் உருவாகும்
கவிதைதருஞ் சுவைக்கும்
இகத்தினிலே நிகருண்டோ
நிகருண்டோ சொல்வீர்!

பொற்கடையல் பெண்ணுளின்
பூரிப்பில் பூத்த
புதுமலராம் கன்னத்தின்
குழிவினிலே, சிரிப்பில்
சிற்றிடையின் அசைவினிலே
யாழ்நரம்பில் ஆடும்
செங்கரத்தின் விரல்வளேவில்
ஒளிநுதலில் அந்த
விற்புருவ வேல்விழியில்
எட்பூவாம் மூக்கில்
விளேவாகும் எழிற்சுவைக்கெம்
உளமேகும் எனினும்
அற்புதமாய் வார்த்தையிலே
சிலேசெதுக்கும் கவிஞன்
அளிக்கின்ற கவிச்சுவைக்கு
நிகருண்டோ சொல்வீர்!

*

# உயர்வுக்கு . . .

ஊக்க முடையசிற் றெறும்பு—போல
ஓயா துழைக்க விரும்பு
ஆக்க வழியிற் றிரும்பு—நல்ல
அறிவு பெறவே விரும்பு.

ஒன் றன்பின் னென்ருக ஊரும்—அதன்
ஒற்றுமை கண்டுநீர் தேரும்
நன்ரும் பணிசெய நீரும்—இன்றே
நாட்டங் கொண்டே ஒன் று சேரும்.

சாதி மதபேத மில்லை—தொழில்
ஆற்றலால் வேற்றுமை இல்லை
மோதுஞ் சுயநலத் தொல்லை—அவையிடம்
முற்ருய் இருந்திட வில்லை.

சோம்பாது நாளும் உழைக்கும்—அவை
சேர்க்கும் உணவை மழைக்கும்
பாம்பையுஞ் சுற்றி வளைக்கும்—ஒருமனப்
பட்டவை இன்பில் திளைக்கும்.

காற்றுள்ள போதே நெல் தூற்று—நீர்
காரியம் ஓர்ந்ததை ஆற்று
வேற்றுமை யாவையும் போக்கு—நீர்
வேண்டாத சோம்பலை அடியோடு நீக்கு.

எல்லோ ரிடத்திலும் அன்பு—நீர்
ஏற்று நடப்பதே பண்பு
கல்வி தரும் மனத் தென்பு—அது
கயமைகள் நீக்கிடும் நம்பு.

*

# அறம்

---

பாரெட்டுத் திக்கிருந்தும்
 பக்திப் படைப் பெருக்குச்
சேரட்டும் ஹஜ்ஜுத்
 தினத்தினிலே—தேரட்டு
மெங்கள் சமயத்தில்
 ஈனப் பிரிவினைகள்
தங்கா திருப்ப தறிந்து.

வெள்ளை கறுப்பு
 நிறமுண்டே ஆனாலும்
இல்லை அதிற்பேதம்
 எல்லவரும்—வல்லானின்
பாதத்து நீழல்
 பணிந்தடிமை ஆவதுவே
ஆதத்து மக்கள் அழகு.

எந்தெந்த நாடோ
எதுவெதுவோ பேசுமொழி
செந்தேனுய்த் தக்பீர்
சொலுமொலியோ—பந்தத்தை
ஊட்டி வளர்க்கும்
உயரறபு ஓங்கட்டும்
தேட்டம் மிகுந்த தொனி.

வெண்சிறை யாங் கொக்கு
வெள்ளம் பரந்ததென
மண்தெரியா மக்கள்
அரபாவில்—விண்விரிய
அல்லா பெரியோன்
அவனுக்கே எப்புகழும்
உள்ளதென ஓங்கும் ஒலி.

எக்குடியோ எம்மரபோ
எல்லாரும் வல்லானை
மிக்க புகழ்பாடி
மெய்சிலிர்க்க—மக்கத்துத்
தந்தை இபுருகீம்
தந்த உயர்கஃபா
சிந்தும் ஒருமை ஒலி.

ஆண்டான் அடிமை
அருகருகே தோள்முட்ட
பூண்ட வுறுதிப்
பெருவணக்கம்—தோன்றியதே
மானிதத்தை ஏற்று
மதிப்பளிக்க ஹஜ்ஜுநிலை
பேணிடுமோ இந்தப் புவி.

தாதை இபுருகீம்
தன் தேய் இசுமாயில்
வேத முதலின்
விருப்புக்கே—ஈதலுக்
கேற்ற இணக்க
இயல்பின் நினைப்பதனை
போற்றும் புனித தினம்.

திருவுடையார் மக்காவைச்
சேர்ந்தார் இருப்போர்
பெருநாளின் நன்நோக்குப்
பேற்றில்—திரள்திரளாய்
பள்ளியினைச் சேர்ந்து
பரவசத்தில் மாலாகி
அள்ளி வருவீர் அறம்.

*

# வினா?

எண்ணங்க ளெங்கோ
வெழுகிற தெழுதுகோல்
முன்னங்கால் குத்திப்
படுக்கிற நிலையிலே
வண்ணங் கள்கூடி
வானிற்க லந்திடும்
வாக்கி லேகருஞ்
செம்மை படியுது
கண்ணங் கேகலை
காய்ச்சிடுங் கற்பனை
காதங்க ளுக்கப்
பாலே பறக்குது
மண்ணெங்கு மிந்த
மாயை பிறந்திடும்
மாற்றங்க ளாலிந்த
வாழ்வோ சிறந்திடும்?

எத்த னைகோடி
இன்பம் அதற்குளும்
எத்தனை கோடித்
துன்பம் கலப்பிலே
பித்தர்க ளெத்தனை
பிடித்தவோர் பாதையில்
சத்திய மசத்தியச்
சதிர்விளை யாட்டிலே
சாத்திய மாவதோ
தன்னல வாழ்க்கையே
புத்தியைப் போட்டுப்
பிசைகிறேன் மாலைவான்
புவியினைப் போலவே
கணங்கணம் மாறுது.

இருளதன் போர்வையை
இறுக்கிற தியல்பிலே
எழிலெலாம் அதனுளே
இற்றழி கின்றது
கருமையின் சிறகுகள்
விரிகிற தரவுகள்
கரடியும் புலிகளும்
களிப்பொடு உலாவிடும்

தருணமோ விதுவென
வானத்தின் கண்களாம்
தாரகை தளதள
வெனத்தமுள் தவித்துமே
உருள்கிற நிலையிலே
ஓரசை வின்றியே
உறங்கிடும் புவியிலே
உளம்பதித் திருக்கிறேன்.

கொட்டிய மையெனக்
கிடக்குமிவ் விருளிலே
கொடுமைகள் ஆயிரம்
குமுறிடும் போதிலும்
நட்டமே யிலையென
நானிலந் துயில் கொளும்
நயமுளா, விடியலில்
நலிவெலாம் அகன்றிடும்
கட்டமொன் றுளவெனும்
கருத்தொடு அமைதிகாண்
காதையில் கற்பனை
கரைகிற வேளையில்
கொட்டிடும் விடமனக்
கொடியரில் இருளற
வெட்டிடும் பகலெது?
வினவொடு எழுகிறேன்.

*

# சிரிக்கின்றேன்!

---

சீரழிவைக் கண்டு
சிரிக்கின்றேன்! சிந்தையிலே
பேர்புகழை நத்தி ஒரு
பேனு பிடித்துலகை
நேர்வழியிற் செல்விக்கும்
நினைப்பின்பம் மாத்துநிலை
ஊர் அறியா தென்றே
உருட்டிப் புரட்டுகின்ற
சீரழிவைக் கண்டு சிரிக்கின்றேன்!

வேதாந்த தத்துவத்தின்
விளக்கச் சுடரென்ற
போதை தலைக்கேறிப்
புரியா துளறல்களின்
சோதாத் தனத்தால்
துளிர்க்குந் தலைக்கனத்தின்
மீத இருப்புகளை
மெல்லத் திணிக்கின்ற
சீரழிவைக் கண்டு சிரிக்கின்றேன்.

தாழ்வாரம் அஃதொன்றே
தங்குமிட மென்றிருக்கும்
கீழ்வாதக் காரர்
கிலிசைகெட்ட எண்ணத்தில்
கோல்தூக்கி மற்றோர்
குறைகாண விழைகின்ற
வால்களேயுங் கொண்டு பல
வக்கணைகள் சொல்லாதிச்
சீரழிவு கண்டு சிரிக்கின்றேன்!


ஊர்க்குருவி என்றும்
பருந்தாக மாட்டாது
பேர்க்குரித் தான
பெருமைப் பெறுமதிகள்
யார்க்கும் உரித்து;
நியாயந் தெரிந்தோராய்
நீர்க்குட் சருகு குத்தி
நிலைநாட்டப் பார்க்கின்ற
சீரழிவைக் கண்டு சிரிக்கின்றேன்!

மலையுயர்ந்த தென்றேதம்
வால் நிமிர்த்திக் குரைக்கின்ற
கலை தெரிந்தோர் கத்திக்
களைக்கட்டும். கத்தலிலே
சிலையெழுப்பிப் பார்க்கட்டும்!
சின்னத் தனத்தாலே
விலையுயர்த்தல் வீண்வேலை!
வீரச் செயல் என்னுஞ்
சீரழிவு கண்டு சிரிக்கின்றேன்!

வாழு மிலக் கியத்தின்
வடிவந் தனிலியங்கும்
நாலு வகையில்
நயக்கு மொரு துறையில்
ஏலுமட்டுஞ் செய்யும்
எழுத்துப் படை வாழ
சால மடித்துத்
தலைமை பெறத் துடிக்கும்
சீரழிவைக் கண்டு சிரிக்கின்றேன்!

*

24|1|68



கிழக்கிலங்கையின் வட பாலமைந்த கொட்டியாபுரத்தைச் சேர்ந்த பெரிய கிண்ணியாவில், ஜனாப் அ. முகம்மது சுல்தான்-ஹயாத்தும்மா தம்பதிகளின் இளைய மகனாக, 8. 10. 30-ல் பிறந்த, கவிஞர் அண்ணலவர்களின் இயற்பெயர் எம். எஸ். எம். சாலிஹ் ஆகும். பயிற்சி பெற்ற தமிழாசிரியரான இவர், தற்சமயம் குட்டிக்காரச்சி அ. மு. க. பாடசாலையிற் தலைமையாசிரியராகக் கடமை பார்க்கின்றார்.

'அவள்' என்னுங் கவிதையுடன் இலக்கிய உலகிற்குள் காலடியெடுத்து வைத்த இவர், கடந்த பன்னிரண்டு ஆண்டுகளுக்கிடையிற் பல நூற்றுக் கணக்கான கவிதைகளை இயற்றியுள்ளார். ஈழத்து இலக்கிய உலகில், 'காதற் பாடல்களுக்கு ஓர் அண்ணல்' என்று மற்றும் கவிஞர்களாலே போற்றப்படுபவர்.

ஏராளமான கட்டுரைகளையும், சில தரமான சிறு கதைகளையும் இவர் எழுதியுள்ளபோதிலும், கவிஞராகவே இவருடைய பெயர் துலங்குகின்றது.

PRINTED AT THE RAINBOW PRINTERS,
231, WOLFENDHAL STREET, COLOMBO-13.